# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 1

சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

September 2017

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


## தோழர் மா சே துங் அவர்களுக்கு செவ்வணக்கம்



*26 செப்டம்பர் 1893 – 9 செப்டம்பர் 1976*

“மாபெரும் வெற்றியை நாம் அடைந்து விட்டோம். ஆனால் தோற்கடிக்கப்பட்ட வர்க்கமானது தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கும். அதன் உறுப்பினர்கள் இன்னும் நம்மைச் சுற்றியே இருக்கின்றனர், அவர்கள் இருந்துகொண்டுதானிருக்கின்றனர். ஆகவே, இறுதி வெற்றி குறித்து இன்னும் சில பத்தாண்டுகளுக்குப் பேசிட முடியாது. நாம் நமது கண்காணிப்பை இழந்துவிடக் கூடாது. லெனினிசப் பார்வையில் பார்த்தால், ஒரு சோசலிச நாட்டின் இறுதி வெற்றிக்கு அந்நாட்டு பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் அந்நாட்டின் பரந்துபட்ட வெகுஜனங்களின் முயற்சிகள் தேவைப்படுவது மட்டுமல்லாது, அது உலகப் புரட்சியின் வெற்றியையும் அனைத்து மனித இனமும் விடுதலையடையக்கூடிய, இவ்வுலகத்தில் மனிதனை மனிதன் சுரண்டும் முறையை அழிப்பதையும்கூட சார்ந்தே உள்ளது. இதன் காரணமாக, நம் நாட்டில் புரட்சியின் இறுதி வெற்றி என்று சர்வ சாதாரணமாகப் பேசுவது தவறானதாகும்; இது லெனினிசத்திற்கு எதிரானதும் உண்மைகளுடன் ஒத்துப் போகாததும் ஆகும்.”

*(1969 ஏப்ரல் 15 அன்று உறையாற்றியது தேர்வு செய்யப்பட்ட வாசிப்புகள்)*

### அஸ்ஸாம், பீஹார், மேற்கு வங்கத்தில் ஏற்பட்ட சமீபத்திய வெள்ளம்

# அரசாங்கத்தின் கொடூரமான இரக்கமற்ற தன்மை மக்களை துன்பத்திலும் பேராபத்திலும் தள்ளி விட்டுள்ளது, மீட்பு நடவடிக்கை எடுக்கவும் உரிய நிவாரணமும் இழப்பீடும் வழங்கவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கோரிக்கை

அஸ்ஸாம், பீஹார், மேற்கு வங்கத்தின் வெள்ள நிலைமையானது ஒவ்வொரு நாள் கடக்கும் போதும் மோசத்திலிருந்து படுமோசத்திற்கு மாறிவருவதைக் கண்டு நாங்கள் ஆழ்ந்த கவலையும் அச்சமுமடைந்துள்ளோம். கணிசமான எண்ணிக்கையில் மக்கள் ஏற்கெனவே உயிரிழந்துள்ளனர். வீடுகளும் சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான கால்நடைகள் மற்றபிற வீட்டு விலங்குகள் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய, மாநில அரசாங்கங்களின் மீட்பு நடவடிக்கையும் நிவாரண நடவடிக்கையும் மிக அரிதாகவே இருந்தன. மத்திய, மாநில அரசாங்கங்களின் கொடூரமும் இரக்கமின்மையும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பெரும் துயரத்திலும் ஆபத்திலும் தள்ளியுள்ளது.

இயற்கைப் பேரழிவு, பெருமழை அல்லது குறைமழையின் மீது எவ்வித கட்டுப்பாட்டையும் அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் கண்கவர் விஞ்ஞானமும் பன்முகத்தன்மைகொண்ட தொழில்நுட்ப முன்னேற்றமும் கொண்ட காலகட்டத்தில் இயற்கைச் சீற்றத்தையும் பாதிப்பின் அளவையும் பெருமளவு குறைத்து, மக்களின் கஷ்டங்களைப் பெருமளவு தணிக்கமுடியும்.

முதற்கண், மத்திய, மாநில அரசாங்கங்கள் தங்களுடைய பட்ஜெட்டுகளின் பெரும்பகுதியை ராணுவம், போலீஸ், நிர்வாகத்திற்கே செலவழிக்கின்றன. நீர்பாசனம், ஆறு வண்டல் அகற்றல், அணை, கால்வாய்கள், குளங்கள், சதுப்பு நிலங்களைப் புதுப்பித்தல், புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு பட்ஜெட்டிலிருந்து மிகக்குறைந்த அளவே செலவு செய்யப்படுகிறது. இவ்வத்தியாவசியப் பணிகளுக்கு போதுமான அளவு செலவு செய்யப்பட்டிருந்தால் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் அதேவேளையில் வறட்சி மற்றும் மழைக் குறைவுகாலங்களில் தேக்கிவைக்கப்பட்ட நீரை வேளாண்மைக்காக விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள். மழை அல்லது வெள்ளநீரை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளும் எவ்வித திட்டமோ வடிகால் வசதியோ எதுவுமே இல்லை.

எனவே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல லட்சக்கணக்கான மக்களின் துயரத்திற்கும் அவர்களின் சொத்துக்கள் இழப்பிற்கும் மத்திய, மாநில அரசாங்கங்களின் இவ்வாறான அலட்சியமே முழுப் பொறுப்பாகும். பேரழிவு மேலாண்மை என்ற பெயர் பலகை மட்டுமே தொங்கிக் கொண்டிருக்கிறது. இயற்கை பேரழிவுகள் ஏற்படும் சமயங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசுத் துறைகளிலிருந்து எவரையும் காணமுடிவதில்லை. எனவே, அரசுத்தரப்பிலிருந்து மீட்பு நடவடிக்கைகளை மிகமிக அரிதாகவே காணமுடிகிறது. மத்தியிலும் மாநிலத்திலுமுள்ள அரசாங்கங்கள் ராணுவம், போலீஸ், நிர்வாகத்தை ஈடுபடுத்தி போர்கால அடிப்படையில் மீட்பு, நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. அரசாங்கத்தால் வினியோகிக்கப்பட்ட அற்ப நிவாரணத்திலும்கூட மந்தமும் வேண்டியோருக்கு சலுகையும் ஊழலும் தலைவிரித்தாடியது.

இவ்வாறான சூழ்நிலையில் நாங்கள் கோருவது:

1) நிபுணர்களின் மேலான ஆலோசனைகளைப் பெற்று, அதிகமழை, குறைந்த மழையை எதிர் கொள்ளும் உடனடி மற்றும் நீண்டகாலத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

2) தேசிய அளவிலும் மாநில அளவிலும் அனைத்துக் கட்சி கமிட்டிகளை அமைப்பதன்மூலம் உரிய முறையில் மீட்பு, நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

3) வெள்ளம் பாதித்த மாநிலங்களுக்கு மனித உதவி மற்றும் பொருளுதவி போதுமான அளவில் மத்திய அரசாங்கத்தால் உடனே வழங்கப்பட வேண்டும்.

4) வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு அரசாங்க மற்றும் தனியார் மருத்துவ குழுக்களை அனுப்பி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான மருத்துவ சிகிச்சை அளிக்க உடனடி ஏற்பாடு செய்யவேண்டும்.

5) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து மருத்துவ உதவிகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும், வெள்ளம் பாதித்த குடும்பங்களுக்கு உரிய இழப்பீட்டை அளிக்க வேண்டும், வெள்ளத்தால் நாசமுற்ற வீடுகளை பழுதுபார்த்தும் மீண்டும் கட்டிக்கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் விவசாய கடன் உட்பட அனைத்து கடன்களும் தள்ளுபடி செய்தும் வேளாண்மைக்கான புதிய நிதியுதவிகளும் செய்யப்படவேண்டும், பயிர்களை இழந்தோருக்கு உரிய இழப்பீடு வழங்கவேண்டும், பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மற்றும்பிற கட்டணங்களை ரத்து செய்து, பாடப்புத்தகங்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கவேண்டும் ■

### டோக்லாம் எல்லை சர்ச்சை

# இந்திய–சீன அரசாங்கங்கள் ராணுவத்தை உடனடியாக திரும்பப்பெற்று பேச்சுவார்த்தை துவக்கப்பட்டிருக்க வேண்டும்

கிட்டத்தட்ட இரண்டரை மாதங்களுக்கு முன்பு, சீனாவுக்கும் பூடானுக்கும் இடையிலான பகுதியில் சீன ராணுவம் டோக்லாம் பீடபூமியில் சாலை அமைக்கத்தொடங்கியது, அப்பகுதியை தங்கள் பகுதி என்று உரிமை கொண்டாடியது. ராயல் பூடான் ராணுவம் இதற்கு ஆட்சேபம் தெரிவித்த தோடு டோக்லாம் பூடானுக்கு சொந்தமானது என்று கூறியது. இருதரப்பும் ஏற்கனவே ஒப்புக் கொண்டபடி தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்று கூறியதுடன் அதனை எதிர்த்திட முயற்சித்தது. ஆனால் அதற்கு பலனில்லை.

#### எல்லை சர்ச்சையை வைத்து இந்திய–சீன முதலாளித்துவ ஆட்சியாளர்கள் போர் வெறியைத் தூண்டுகின்றனர்

பூடான் அரசாங்கம் கோரிக்கை விடுத்ததால், ஏதோ பூடான் தனது பாதுகாப்பில் இருப்பதுபோல், இந்திய அரசாங்கம் அப்பகுதிக்கு தனது ராணுவத்தை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. இந்திய ராணுவம் தனது பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாக சீன அரசாங்கம் கூறியது. இது இந்தியா சீனா

தொடர்ச்சி 2ம் பக்கம்

# முதலாளித்துவ நாடாக மாறிய சீனா இந்தியாவைப் போன்றே நெருக்கடியில் மூழ்கிக்கொண்டிருக்கின்றது

*1ம் பக்கத் தொடர்ச்சி*

இடையே ராணுவ மோதலுக்கு வித்திட்டது. சில நாட்களுக்குப் பிறகு, தூதர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் இந்திய அரசாங்கத்திற்கு சாதகமான முடிவு ஏதும் வரவில்லை. ஆக, ஏதோ சில காரணங்களுக்காக ராணுவத்தை விலக்கிக் கொள்ளுமாறு இந்தியாவை பூடான் கேட்டுக் கொண்ட பின்னரும் பிரச்சினை தொடர்ந்தது. இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் அல்லது சக்திகள், அவை எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், சூழ்நிலையை தெளிவாக மக்களுக்கு விளக்குவதற்குக் கவலைப்படவில்லை. மாறாக அவர்கள் எல்லோரும் சீனாவுக்கு எதிராக அர்த்தமற்ற கருத்துக்களையே பரப்பிவந்தனர். உடனடியாக இந்திய ராணுவத்தை ஏன் திரும்பப் பெறவேண்டும் என்று ஒருவர்கூட உறுதியாகக் கோரவில்லை. மாறாக மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஆர்எஸ்எஸ்–பாஜக இந்தப் பிரச்சினையை மையமாகவைத்து தேசிய வெறிவாதத்தை தூண்டிவிடுவதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு மக்களின் வாழ்க்கையில் உள்ள முதுகை ஒடிக்கும் ஆயிரத்தோரு பிரச்சினைகளிலிருந்து அவர்களது கவனத்தை திசை திருப்பியது.

சீன அரசாங்கம், அதன் வெளிநாட்டு அமைச்சரக செய்தித் தொடர்பாளர் அல்லது கட்சியின் அதிகாரபூர்வ ஊடகத்தின் மூலமாக, தங்களது ஆக்ரோஷமான வாய்ஜாலத்தையும் ஒருதலைப் பட்சமான நடவடிக்கையையும் வெளிப்படுத்துவதில் சற்றும் சளைக்காமல் டோக்லாமில் சாலை அமைத்தே தீருவோம் என்று கொக்கரித்தது. இந்தியத் துருப்புகளை வாபஸ் பெற்றால்தான் தங்களது துருப்புக்களை வாபஸ் பெறும் சூழல் உருவாகும், அதுவரை பேச்சுவார்த்தைக்கு இடமேதுமில்லை என சீனா கூறியது. நீண்ட மோதலுக்கு சீன அரசாங்கம் முழுமையாக தயாராகிவிட்டதாக அவர்கள் தெரிவித்ததனால் அதை நிரூபிப்பதற்காக, சீன அரசாங்கம் தனது கூடுதல் ராணுவ வாகனங்களையும் தளவாடங்களையும் திபேத்திற்கு ஏராளமாக அனுப்பியது. இந்திய ராணுவ வீரர்களைக் கைது செய்வோம், தேவைப்பட்டால் அவர்களைக் கொல்வோம் என்றும் சீன அரசாங்கம் மிரட்டியது. எதிர்ப்புரட்சியின் காரணமாக சீனாவில் முதலாளித்துவ அமைப்பு முறை மீண்டும் ஏற்பட்டது. அது முதல் எண்ணற்ற தீர்க்கவியலாத பிரச்சினைகளால் பீடிக்கப்பட்டிருந்த மக்களிடையே சீன ஆட்சியாளர்களும் புதுடில்லிக்கு எதிரான தங்களின் வீர ஆவேசப் பேச்சுக்கள் மூலம் தேசிய வெறிவாதத்தைத் தூண்டி மக்களின் கவனத்தைத் திசைதிருப்பினர்.

ஆக இந்திய மற்றும் சீனாவின் இரண்டு முதலாளித்துவ அரசாங்கங்களுமே உதட்டளவில் அமைதிப் பேச்சுவார்த்தை என்று பேசிக் கொண்டாலும் தங்களது செயல்பாடுகள் வார்த்தைகள் மூலமாக அவரவர் நாட்டு மக்களிடையே போர்வெறி மனப்பான்மையைத் தூண்டினர். இப்பிரச்சினையை ராஜதந்திர பேச்சுவார்த்தையின் மூலமாக விரைவாக அமைதியாகப் பேசித்தீர்க்காவிட்டால் இப்பிராந்தியத்திலிருக்கும் பெரும் முதலாளித்துவ நாடுகளான இந்நாடுகளுக்கிடையே மேலுமொரு எல்லைப் போர் உருவாகிவிடும். அது இந்த இருநாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் மற்ற சிறிய நாடுகளின் மக்களிடமும் கடுமையான பாதிப்புகளை உருவாக்கிவிடக்கூடும் என்று பலதரப்புகளிலிருந்தும் கவலை வெளிப்படுத்தப்பட்டது.

## எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளாமல் ஏன் இரு அரசாங்கங்களும் அதனை அப்படியே வைத்திருக்கின்றன ?

பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால், ராணுவத்தை விலக்கிக் கொள்வதன் மூலமாக போர்ப் பதட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அண்டை நாடுகளிடையே உள்ள எல்லைப் பிரச்சினைகள் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாவிட்டால், மோதல்கள் அதிகரித்து கடுமையான வாக்குவாதம் ஏற்படலாம், அது முழு வீச்சிலான எல்லைப் போராகவும் மாற வாய்ப்புள்ளது. இவையெல்லாம் தொடர்ந்து நடைபெற்றுவிடக்கூடும். எனவே அண்டை நாடுகளிடையே பொறுமையான, அமைதியான, மென்மையான மற்றும் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை மூலமாக விவாதங்கள் மூலமாக உடன்பாடுகள் மூலமாக எல்லை வரையறைகள்–மறுவரையறைகள் செய்வது மிகவும் அத்தியாவசியமான பணியாகும். காலனிகளாக அல்லது அரைக் காலனிகளாக இருந்த நாடுகளின் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இது மிகவும் அவசியமானதாகும். பெரும்பாலும் இந்த நாடுகளின் எல்லைகள் அவற்றை முன்பு ஆண்ட ஏகாதிபத்திய ஆட்சியாளர்களால் அவர்களது நலன்சார்ந்து தீர்மானிக்கப்பட்டவை ஆகும். இந்த இரு நாட்டு மக்களும் அவரவர் நாட்டு சுரண்டல் முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிரான தங்களது போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும்விதமாக தங்களுக்குள் தேவையற்ற தவறான புரிதலையும் பகைமை உணர்வையும் வளர்த்துக்கொள்ளாமல் இருப்பது மிகவும் அவசியமான பணியாகும். அவர்களது ஆட்சியாளர்கள் போர்வெறியைத் தூண்டிவிட்டு எல்லைப்பிரச்சினையை உயிரோடு வைத்து மக்களை முட்டாள்களாக்கப் பார்க்கின்றனர். அதோடு இந்தப் போர் வெறியைப் பயன்படுத்தி தீர்க்கமுடியாத சந்தை நெருக்கடியால் மூச்சுத் திணறிவரும் முதலாளித்துவப் பொருளாதாரத்தை எப்படியாவது ஊக்கப்படுத்துவதற்கான இறுதி முயற்சியாக பொருளாதாரத்தை ராணுவமயமாக்கும், அதாவது மக்களுடைய வரிப்பணத்தை ராணுவ–தொழிற்சாலை செலவினங்களுக்காக அதிகப்படுத்துவதை நியாயப்படுத்துகின்றனர். இதுதான் இப்பிராந்தியத்தின் மிகப்பெரிய முதலாளித்துவ நாடுகளான இந்திய, சீன விவகாரத்தில் நடக்கிறது. இந்த இரண்டு அரசாங்கங்களுமே மக்களுக்கான மக்களின் அரசாங்கங்களல்ல. மாறாக போர் வெறியைத் தூண்டிவிட்டு ராணுவ பட்ஜெட்டை அதிகரிக்கவும் மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்காகவும், நிலவும் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பிற்கு எதிரான போராட்டங்களுக்கு ஊறு விளைவிப்பதற்காகவும் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்காமல் வைத்துள்ளன. சீனாவுக்கும் பூடானுக்கும் இடையில் உருவான டோக்லாம் பிரச்சினையில் இந்தியத் தலையீடு தேவையே இல்லை. ஆனாலும் இந்தியா அதில் தலையிட்டது. எப்படியானாலும் இதுவரை பிரச்சினையாக இல்லாதிருந்த டோக்லாம் மட்டுமல்லாமல் சீன–இந்திய நீண்ட எல்லையில் பிரச்சினை இன்னும் இருந்துவருகிறது.

## எல்லை விவகாரத்தில் முந்தைய சோசலிச சீனா வேறுவிதமான அணுகுமுறையில் இருந்தது

இதற்கு முன்பு சூழல் வேறுவிதமாக இருந்தது. இன்னமும் வரையறை செய்யப்படாத இந்திய – சீன எல்லைப் பிரச்சினை அனைவருக்கும் தெரியும். இதை வைத்து இருநாடுகளிடையே 1962இல் எல்லைப்போரும் நடைபெற்றது. அப்போது புதிதாக உருவாகியிருந்த முதலாளித்துவ இந்திய அரசின் பிரதமராக இந்திய ஏகபோகங்களின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதியான காங்கிரசின் ஜவஹர்லால் நேருவும், முழு அளவிலான சோசலிசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த சீன மக்கள் குடியரசின் அதிபராக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான மாபெரும் தலைவர் மா சே துங்கும் இருந்தனர். இந்திய, சீன எல்லைகள் இந்த இருநாடுகளும் சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக அந்தந்த நாடுகளை ஆட்சிசெய்தவர்களால் வகுக்கப்பட்டவை. இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், நேபாளம், சிக்கிம், பூடான் போன்ற மலை ராஜ்யங்களின் மன்னர்களாலும் வகுக்கப்பட்டவை. அவை பெரும்பாலும் பரஸ்பர பேச்சுவார்த்தை மூலமாக அல்லாமல் அவரவர் தனிப்பட்ட முறையிலேயே வகுக்கப்பட்டன. இந்நிலையில் போருக்கு முன்பு 1955 பங்துங் மாநாடு நடைபெற்றது. அதற்குப் பின்பு சில ஆண்டுகள் இந்தப் பிரச்சினையை சீன அரசாங்கம் சோசலிச சித்தாந்தத்தின்படி அணுகியது. எல்லைகளை வரையறுப்பதற்கு பேச்சுவார்த்தைக்காகவும் இந்திய ஆட்சியாளர்களை கொண்டுவர முயற்சித்தனர். மேற்கிலுள்ள அக்ஷய் சைன், டோக்லாம் இருக்கும் சிக்கிம்–பூடான்– சீன முச்சந்தி உள்ளிட்ட நடுவில் உள்ள சிக்கிம் பிரிவு, கிழக்கிலுள்ள மெக்மோகன் எல்லை ஆகியவை பிரச்சினைக்குரிய எல்லைகளாகக் கண்டறியப்பட்டன. இருதரப்பும் என்னதான் கூறினாலும், இந்தியாவுடன் தனது நட்புறவைப் பேணுவதற்காக அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றும் அதுவரை தற்போதைய நிலையே தொடரலாம் என்றும் அன்றைய சோசலிச சீனா தெளிவாக அறிவித்தது. இந்திய அரசாங்கம் முதலில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. ஆனால் உடனடியாக எல்லைகளை ‘மாற்ற முடியாது’ எனவே ‘பேரம் பேச முடியாது’, ‘பாரம்பரியமாக எல்லைகள் நீண்ட காலமாக இருப்பவை’, ‘புவியியல் ரீதியாகவும் இயற்கையாகவும் காலங்காலமாக இருப்பவை’ என்று பேசத் தொடங்கியது. இவ்வாறு இறுக்கமான நிலையைப் பின்பற்றியதோடு, இந்திய ராணுவம் எல்லையில் முன்னோக்கி அணிவகுத்ததோடு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தன்னிச்சையாக வகுத்த மெக்மோகன் எல்லையைத் தாண்டியும் எல்லை சோதனை சாவடிகளை அமைத்தது. இதற்கு சீன அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்தது. ஒரு கட்டத்தில், இந்தியாவின் கூற்றை அமல்படுத்துவதற்காக ‘நமது பகுதியை விடுவிப்பதற்காக’ தாக்குதல் நடத்துமாறும் இந்திய ராணுவத்திற்கு உத்தரவிட்ட இந்தியப் பிரதமர் நேரு, இந்திய மக்களிடம் போர் வெறியையும் தூண்டிவிட்டார். இந்தச் சாவடிகளை திரும்பப்பெறுமாறும் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு உடனடியாகப் பேச்சுவார்த்தைக்கு வருமாறும் சோசலிச சீனா மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்த பின்னரும் அது இந்திய ஆட்சியாளர்களின் காதுகளில் விழவில்லை. இறுதியில் 20 அக்டோபர் 1962இல் சீன மக்கள் விடுதலை ராணுவம் இந்த சட்ட விரோதமான சாவடிகளை அழிப்பதற்கு தாக்குதல் தொடுத்தது. உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியைத் தாண்டி எழுப்பப்பட்டிருந்த இந்த காவல் சாவடிகளை அவர்கள் அழித்தனர். நான்கு நாள் சண்டைக்குப் பிறகு சீன மக்கள் விடுதலை ராணுவம் முன்னேறுவதை நிறுத்தியது. சீன ராணுவம் இந்திய–சீன எல்லை என்று அவர்கள் கருதும் நிலைகள் வரைத்தான் சீன ராணுவம் முன்னேறியது, அதைத் தாண்டி அவர்கள் முன்னேறவில்லை என்பதை இங்கே குறிப்பிடப்படவேண்டியதாகும். சோசலிச சீன அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில், முதலில், பேச்சுவார்த்தை மூலமாக அமைதியான உடன்படிக்கைக்கு வரவேண்டும், இரண்டாவதாக, 1959இல் இருந்தபடி, அதாவது மோதல் தொடங்குவதற்கு முந்தைய எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியை மதிக்க வேண்டும், மூன்றாவதாக எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து 20கிமீ தூரத்திற்கு இருதரப்பும் தங்களது ராணுவத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தது. அடுத்த சில நாட்களில், சீன அரசாங்கம் தானாகவே போர் நிறுத்தத்தை அறிவித்தது, பிடித்த எந்தப் பகுதியையும் வைத்துக் கொள்ளாமல், அது முன்மொழிந்ததைப் போலவே மேற்கு, மத்திய, மற்றும் கிழக்குப் பகுதிகளிலிருந்து தனது ராணுவத்தை விலக்கிக்கொண்டது, 1959இல் இருந்த எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதி வரையறையைக் காட்டிலும் 20கிமீ தூரம் பின்வாங்கிக் கொண்டது. அதன் பின்னர், இந்திய அரசாங்கமும் தனது பழைய நிலைப்பாட்டிற்கு வந்து ராணுவத்தை பழைய நிலைக்கு அழைத்துக்கொண்டது. இந்த ஒட்டுமொத்த சம்பவத்திலும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தால், ஏகபோகங்களால் மேற்பார்வையிடப்படும் இந்திய பூர்ஷ்வா அரசாங்கத்தின் நடவடிக்கையால் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை, மாறாக ஏற்கனவே முதலாளித்துவ சுரண்டலால் முதுகொடிந்திருக்கும் மக்கள் மீது போர் சுமையும் நெருக்கடியுமே திணிக்கப்பட்டது.

## இந்திய–சீன அரசாங்கங்கள் இரண்டுமே விரிவுவாதத் திட்டங்களை முன்னெடுக்கின்றன

நீண்ட காலத்திற்கு முன்பே ஏகாதிபத்திய குணாம்சத்தை அடைந்துவிட்ட இந்திய முதலாளித்துவம் உள்நாட்டு சந்தை நெருக்கடி அதிகரிப்பால் உருவான பாதிப்பால் தங்களிடம் குவித்து நிலைபெற்றுள்ள நிதி மூலதனத்தை சிறிய பலகீனமான நாடுகளின் சந்தையையும் வளங்களையும் சுரண்டுவதற்காக அங்கே முதலீடு செய்யத் தொடங்கியது. அதற்கு ஏற்றார்போல் அதன் அண்டை நாடுகளுடனான அணுகுமுறையும் மாறியது. பலகீனமான அண்டை நாடுகளுடன் தனது விரிவுவாத அணுகுமுறையைப் பின்பற்றுவது

தொடர்ச்சி 11ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# சோசலிசப் புரட்சியின் வெற்றிச் சகாப்தம் ஆரம்பம்

*[உலகின் முதல் சோசலிச அரசான சோவியத் யூனியன் உருவாவதற்கு அடித்தளமிட்ட வரலாற்று சிறப்பு மிக்க நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு கொண்டாட்டங்களையொட்டி எமது ஆங்கில ஏடான புரோலிடேரியன் எராவானது* (Proletarian Era), *மனித இன வரலாற்றில் சகாப்தம் படைத்த இந்த நிகழ்வு குறித்த பல்வேறு கட்டுரைகளை வெளியிட முடிவு செய்துள்ளது. இங்கே, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் லெனின் அவர்கள் தலைமையில் போல்ஷ்விக் கட்சி நிறுவப்பட்டு, புரட்சிக்கான தயாரிப்பு வேலைகள் மேற்கொண்டதன் போக்கு குறித்த கட்டுரைகளை மார்ச் 15, 2017 பதிப்பிலிருந்து தொடர்ச்சியாக வெளியிட நாங்கள் துவங்கியிருக்கின்றோம். அக்கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து தொடர்ச்சியாக இங்கே பிரசுரிக்கிறோம்]*

*[பாட்டாளி சிந்தனை, தொகுதி 27, எண் 12யின் தொடர்ச்சி]*

### போல்ஷ்விக் கட்சியின் ஆறாவது மாநாடு

ஒரு பாதகமான சூழ்நிலையில், ஆறாவது கட்சி மாநாடு **1917** ஜூலை மாதம் **26**ம் தேதியிலிருந்து ஆகஸ்டு மாதம் **3**ஆம் தேதி வரையில் மிகவும் ரகசியமாக நடைபெற்றது. இச்சமயங்களிலெல்லாம் தற்காலிக அரசாங்கத்தின் ரகசிய ஏஜண்டுகள் லெனினை வெறியுடன் தேடிக்கொண்டிருந்தனர். அதன் காரணமாக, அம்மாநாட்டில் லெனின் கலந்துகொள்ள இயலவில்லை. ஆனால், ஸ்டாலின், மாலடோவ், ஆர்ட்கானிகிட்ஜே மற்றும் அவரது பிற நெருங்கிய தோழர்கள் மூலம் ரகசிய முகாமிலிருந்து தொண்டர்களுக்கு வழிகாட்டுதல்கள் தருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஆறாவது மாநாட்டில் **157** பிரதிநிதிகள் பங்கேற்றனர். அந்நேரத்தில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை **2,40,000**மாக இருந்தது. போல்ஷ்விக் கட்சி தலைமறைவாவதற்கு முன்னர், ரஷ்ய மொழியிலும் பிற மொழிகளிலும் **41** கட்சிப் பத்திரிகைகளையும் புத்தங்களையும் பிரசுரித்துக் கொண்டிருந்தது.

இரஷ்யப் புரட்சியின் சரித்திரத்தில் போல்ஷ்விக் கட்சியின் ஆறாவது மாநாடு மிகப்பெரும் பங்காற்றியது. ஏனெனில், இம்மாநாட்டில்தான் லெனினது பெருஞ்சிறப்புமிக்க சோசலிசப் புரட்சிக் கருத்தியல், விரிவான விவாதங்களைத் தொடர்ந்து இறுதியில் நிலைநாட்டப்பட்டது. டிராட்ஸ்கி, அவரைப் பின்பற்றுபவர்களான பிரியோப்ரஜஸ்கி, புக்காரின் மற்றும் பிறர், சோசலிசப் புரட்சியின் கருத்தியல், தந்திரம் மற்றும் உத்திகளுக்கு எதிரான நிலைபாட்டைக் கொண்டிருந்தனர். மேற்குப் பகுதியில் புரட்சி நிறைவேற்றப் படாத வரையில், அரசு அதிகாரத்தை இரஷ்யப் பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவது இயலாது. அப்படி ஒருவேளை இயன்றாலும் புரட்சியை பாதுகாத்திடுவது இயலாது என்பது அவர்களின் கருத்தாகும். இது தொடர்பாக, நிரந்தரப் புரட்சி எனும் ஒரு கருத்தியலை அவர்கள் முன்வைத்தனர். விவசாயிகள் உழைக்கும் வர்க்கத்தின் பக்கம் வரமாட்டார்கள் என்பது அவர்களின் மற்றுமொரு கருத்தாகும். மாறாக, விவசாயிகள் புரட்சியை எதிர்த்து நிற்பார்கள் என்றார்கள்.

மாபெரும் லெனின் அவர்களது போதனைகளின் அடிப்படையில், இத்தகைய தவறான சந்தர்ப்பவாதக் கோட்பாடுகளை ஸ்டாலின் முறியடித்தார். பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் இருந்தபோதிலும் புரட்சியானது எங்ஙனம் முன்னேறிச் சென்று கொண்டிருந்தது என்பதை ஸ்டாலின் அவர்கள் தெள்ளத்தெளிவாகச் சுட்டிக் காண்பித்தார். இரஷ்யப்புரட்சியானது சோசலிசப் புரட்சியின் குணாம்சத்தை பெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக் காண்பித்தார். இச்சமயத்தில், சோசலிசப் புரட்சி கீழ்க்கண்ட கடமைகளைச் சுமத்தியிருந்தது. அவையாவன: உற்பத்தி மற்றும் வினியோகத்தில் உழைக்கும் வர்க்கத்தின் கட்டுப்பாட்டை நிறுவுதல், விவசாயிகளுக்கு நிலத்தை வழங்கி அரசு அதிகாரத்தை பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து பறித்து உழைக்கும் வர்க்கத்தின் மற்றும் ஏழை விவசாயிகளின் கைகளில் ஒப்படைத்தல் ஆகியனவாகும்

போல்ஷ்விக் கட்சி ஆறாவது மாநாட்டில், ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்வது எனத் தீர்மானித்தது. அதற்காக, பாட்டாளி வர்க்கத்தையும் கடைத்தட்டு ஏழை விவசாயிகளையும் ஒன்றுதிரட்டிட வேண்டும் என முடிவு செய்தது. ஆறாவது மாநாடு பூர்ஷ்வா வர்க்கத்திற்கெதிரான இறுதி யுத்தத்திற்காக தொழிலாளர்கள், படைவீரர்கள் மற்றும் விவசாயிகள் தங்களை ஒன்றுதிரட்டிக் கொள்ள வேண்டுமென்ற அறைகூவலை விடுத்தது.

### தளபதி கொர்நிலொவ் தீட்டிய சதித்திட்டம்

இடைப்பட்ட சமயத்தில், இரஷ்ய பூர்ஷ்வா வர்க்கம், பலவீனமாயிருந்த சோவியத்துக்களை அழித்தொழித்திடவும் வெளிப்படையான எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயார் செய்துகொண்டிருந்தது. சோசலிஸ்ட்–புரட்சியாளர் கெரென்ஸ்கி, விவசாயிகள் நிலத்தை மீண்டும் கைப்பற்றும் சட்டவிரோத செயல்பாடுகள் உள்ளிட்ட எந்த புரட்சிகர இயக்கங்களும் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும் என மிரட்டினார். கமிட்டிகளையும் சோவியத்துக்களையும் துடைத்தெறிந்து விட்டு ராணுவ சர்வாதிகாரத்தை நிறுவிடவேண்டுமென தளபதி கொர்நிலொவ் விரும்பினார். வங்கி உடைமையாளர்கள், வியாபாரிகள் மற்றும் தொழிற்சாலை முதலாளிகள் அனைவரும் தளபதி கொர்நிலொவ் பக்கம் அணிதிரண்டதோடு பெரும் நிதியுதவி அளித்திடுவதாக உறுதியளித்தனர். முதல் உலகப்போரில் இரஷ்யாவின் கூட்டணி நாடுகளான கிரேட் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தங்களின் ஆதரவைத் தந்ததுடன், புரட்சிக்கு எதிரான கடும் நடவடிக்கைகளை உடனடியான எடுத்திடுமாறு தளபதி கொர்நிலொவ்வை வற்புறுத்தினர்.

ஆகஸ்ட் **25**ஆம் நாள், தளபதி கொர்நிலோவ் தலைமையில் ராணுவப் படைப்பிரிவுகளை பெட்ரோகிராட்டுக்கு அனுப்பிட கொர்நிலோவ் ஏற்பாடு செய்தார். இத்தாக்குதலுக்கு எதிராக போல்ஷ்விக் கட்சியானது, ஆயுதம் தாங்கி எதிர்த்திடுமாறு தொழிலாளர்களுக்கும் படைவீரர்களுக்கும் அறைகூவல் விடுத்தது. விரைவிலேயே, தொழிலாளர்கள் ஆயுதம் தாங்கி எதிர்த்திடுவதற்கான தயாரிப்பு வேலைகளைத் துவங்கினர். எங்கெங்கிலும் செம்படையினர்களின் எண்ணிலடங்கா அரண்கள் அமைக்கப்பட்டன. எதிர்ப்பு போராட்டத்தில் இறங்கிடுமாறு தொழிற்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு அறைகூவல் விடுத்தன. பெட்ரோகிராடின் புரட்சி ராணுவமானது யுத்தத்திற்கு தயாராகத் துவங்கியது. பெட்ரோகிராட் நகரத்தைச் சுற்றியும் புரட்சியாளர்கள் பதுங்கு குழிகளை ஏற்படுத்தினர். முள்ளாலான கம்பிச்சுவர்கள் எழும்பின. நகரத்தை நோக்கிச்செல்லும் இருப்புப் பாதைகள் துண்டிக்கப்பட்டன. கொர்நிலோவின் படை தாக்குதல் தொடுக்கும் என அஞ்சப்பட்ட இடங்களிலெல்லாம் புரட்சிக் கமிட்டிகளும் புரட்சித் தலைமையகங்களும் நிறுவப்பட்டன.

பயந்து போயிருந்த கெரென்ஸ்கி உள்ளிட்ட சோசலிஸ்ட்–புரட்சியாளர்களும் மென்ஷ்விக்குகளும் போல்ஷ்விக்குகளிடம் கெஞ்சி அடைக்கலம் கேட்டுக்கொண்டிருந்த நேரமது. பெட்ரோகிராடில் போல்ஷ்விக்குகளால் மட்டுமே கொர்நிலோவை தோற்கடித்திட முடியும் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். கொர்நிலோவின் தாக்குதலை முறியடித்திட போல்ஷ்விக்குகள் மக்களை ஒன்று திரட்டிக்கொண்டிருந்தனர். அதே போல, கெரென்ஸ்கி அரசாங்கத்தின், மென்ஷ்விக்குகள் மற்றும் சோசலிஸ்ட்–புரட்சியாளர்களின் முகத்திரையைக் கிழித்திடவும் போல்ஷ்விக்குகள் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தனர். அரசாங்கத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளும் கொள்கைகளும் கொர்நிலோவின் எதிர்ப்புரட்சி சதிகளுக்கே உண்மையில் உதவிக்கொண்டிருக்கின்றன என்பதை போல்ஷ்விக்குகள் மக்களுக்கு விளக்கினார்கள். போல்ஷ்விக்குகளின் இத்தகைய செயல்பாடுகளால், கொர்நிலோவிடமிருந்து வந்த தாக்குதல்களை இறுதியில் முறியடித்திட முடிந்தது. மக்களின் சில முக்கியகுழப்பங்கள் கொர்நிலோவிற்கு போல்ஷ்விக்குகள் கொடுத்த தோல்வியினால் தெளிவு படுத்தப்பட்டன. முதலாவதாக, எதிர்ப்புரட்சியாளர்களைவிட புரட்சியாளர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக இருந்தனர் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டனர். போல்ஷ்விக்குகளின் வளர்ச்சியானது, எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடிய காரணியாக நிற்கின்றது என்பதையும், எந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கையையும் நசுக்கிவிடும் சக்தி அதற்கு உள்ளது என்பதையும், கொர்நிலோவின் தோல்வியானது மேலும் நிரூபித்தது. இறுதியாக, கொர்நிலோவின் தோல்வியானது, சோவியத்துக்கள் பலவீனமாகி விட்டனர் என்று கருதப்பட்டதற்கு மாறாக, உண்மையில் அவர்கள் புரட்சிகரப் பலத்தைக் கொண்டிருந்தனர் என்பது நிரூபணமானது. சோவியத்துக்கள் மற்றும் புரட்சிக் குழுக்கள் தான் கொர்நிலோவின் படை முன்னேறிச் செல்வதைதடுத்து நிறுத்தி, அதன் பலத்தை நொறுங்கச் செய்தது என்பதில் எவ்வித ஐயமும் இருக்கவில்லை.

கொர்நிலோவுடனான மோதல், சோர்ந்து போயிருந்த சோவியத்துக்களை தட்டியெழுப்பி அவர்களுக்கு புத்துணர்வைத் தந்தது. இந்த யுத்தம், அவர்களின் தயக்கத்தைப் போக்கி, புரட்சிகரச் சூழலுக்குள் அவர்களைச் சரியாகக் கொண்டுவந்து, போல்ஷ்விக் கட்சியை நோக்கிய அவர்களின் ஈர்ப்பைப் பலப்படுத்தியது. சோவித்துக்களில் போல்ஷ்விக்குகளின் செல்வாக்கு உயர்ந்தது. குறு நகரங்கள் மற்றும் நகரங்களில் மட்டுமின்றி, கிராமப்புற மாவட்டங்களிலும்கூட போல்ஷ்விக்குகளின் செல்வாக்கு அதிகரித்தது. விளிம்பு நிலையிலுள்ள விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் பெரும் எண்ணிக்கையில் போல்ஷ்விக் கட்சியை நோக்கி ஈர்க்கப்பட்டனர். **1917**ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில், நிலப்பிரபுக்கள் வசமிருந்த பெருமளவு நிலங்களை விவசாயிகள் கைப்பற்றினர். புரட்சிக் கனவினால் தூண்டப்பட்டிருந்த விவசாயிகளை தண்டனைகளாலும் அல்லது வேறு எதனாலும் அடக்கி வைத்திட முடியவில்லை. அதன் பிறகு புரட்சி, பெரும் அலையலையாய் பொங்கியெழுந்து கொண்டிருந்தது.

சோவியத்துக்களில் மென்ஷ்விக்குகள் மற்றும் சோசலிஸ்ட்–புரட்சியாளர்கள் இருந்த இடத்தில் போல்ஷ்விக் கட்சியின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படத் துவங்கிய அந்நேரத்தில், சூழ்நிலையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு, கோஷங்கள் மீண்டும் எழுப்பப்பட்டன: அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே. இம்முறை அக்கோஷங்களின் நோக்கமானது, தற்காலிக அரசாங்கத்தை அகற்றிட வேண்டும் என்பதாகவும் போல்ஷ்விக்குகள் தலைமையிலிருக்கும் சோவியத்துக்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதாகவும் இருந்தது.

சமரசவாதக் கட்சிகள்கூட பிளவுகளைச் சந்தித்தன. பெருமளவிலான மென்ஷ்விக் மற்றும் சோசலிஸ்ட்–புரட்சியாளர்கள் போல்ஷ்விக் கட்சியில் இணைந்தனர்.

கொர்நிலோவின் தோல்வியைத் தொடர்ந்து, மென்ஷ்விக்குகளும் சோசலிஸ்ட்–புரட்சியாளர்களும் புரட்சி அலையைத் தடுத்து நிறுத்திட மற்றுமொரு முயற்சியினை மேற்கொண்டனர். **1917**, செப்டம்பர் **12**ஆம் தேதியன்று அவர்கள் ஊசலாட்டத்திலிருந்த சோவியத்துக்களையும் சமரசவாத தொழிற்சங்கங்களையும் இன்னும் சிலரையும் உள்ளடக்கிய ஓர் அனைத்து இரஷ்ய ஜனநாயக மாநாட்டைக் கூட்டினர். இம்மாநாடு, ஒரு முன்னோட்ட பாராளுமன்றத்தை (பாராளுமன்ற முன்முயற்சிக்கான ஒரு பிரதானக் குழு) உருவாக்கியது. அத்தகைய முன்னோட்ட பாராளுமன்றத்தை போல்ஷ்விக் கட்சி புறக்கணிக்க முடிவு செய்தது. ஆனால், காமனேவ், ஜினோவிவ் மற்றும் பிறர், ஆபத்திலிருக்கும் பூர்ஷ்வா அரசாங்கத்தில் இணைவதும் முன்னோட்ட பாராளுமன்றத்தில் பங்கெடுப்பதும் அவசியம் என்று மென்ஷ்விக்குகளின் குரலை ஆதரித்துப் பேசினர். ஆனால், இதன் பொருள், புரட்சிகரக் கனவுகளைத் தவறாக வழிநடத்திச்செல்லும் அதே நேரத்தில், இது பூர்ஷ்வா பாராளுமன்றத்தின் மீதான ஈர்ப்பை ஏற்படுத்துவதாகும் என லெனின் சுட்டிக் காண்பித்தார்.

போல்ஷ்விக்குகள் ஆயுதம் தாங்கிய எழுச்சிக்கு தயாராகிக் கொண்டேயிருந்தார்கள். படைவீரர் பிரிவினர், செம்படைப் பிரிவினர் மற்றும் கடற்படையைச் சார்ந்த புரட்சியாளர்கள் ஆகியோர் ஆயுதப் போர் நடவடிக்கைகளுக்கான ஒரு தகவுப் பொருத்த இடம் (Logistics Position) குறித்த

தொடர்ச்சி 4ம் பக்கம்

# மாபெரும் நவம்பர் புரட்சி

3ம் பக்கத் தொடர்ச்சி

முழுமையான மற்றும் நுணுக்கமான ஒரு திட்டத்தை லெனின் தயாரித்தார்.

அக்டோபர் 7ஆம் நாள், லெனின் அவர்கள் பரம ரகசியமாக பெட்ரோகிராட் நகரத்திற்கு வந்தார். அக்டோபர் 10ஆம் நாள், போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் கமிட்டி அதன் சரித்திரப் புகழ் வாய்ந்த கூட்டத்தை நடத்தியது. அதில் ஒரு சில நாட்களில் ஆயுதம் தாங்கிய எழுச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. காமனேவ், ஜினோவிவ் ஆகிய இரண்டு மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவை எதிர்த்தனர். மென்ஷ்விக்குகளைப் போன்றே அவர்களும் ஒரு பாராளுமன்றக் குடியரசு அமைய வேண்டும் எனும் கனவு கண்டுகொண்டிருந்தனர். சோசலிசப் புரட்சியை நிறைவேற்றும் தகுதியை உழைக்கும் வர்க்கம் அடைந்துவிட்டதாக அவர்கள் நம்பவில்லை. அக்கூட்டத்திலேயே ட்ராட்ஸ்கி, ஆயுத எழுச்சி நடத்தும் தேதியைத் தள்ளிப்போட வேண்டும் என்றும், இரண்டாவது மாநாட்டுக்குப் பின்னர் அதனைத் துவங்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் கமிட்டியானது, ஆயுத எழுச்சியை கட்டியமைத்திட, தென்மேற்கு போர்முனை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதி களிலுள்ள பல்வேறு மாகாணங்களுக்கு வொரோஷிலோவ், மாலடோவ், ஜெர்சின்ஸ்கி, ஓர்ஜோனிக்கிட்சே, கிரோவ், ககனோவிச் மற்றும் பிற தலைவர்களை அனுப்பி வைத்தது. பெட்ரோ கிராடில் எழுச்சி துவங்கியதும் அது நாடு முழு வதிலும் பரவிட வேண்டும் என்பது திட்டமாக இருந்தது. கட்சி மத்தியக் கமிட்டியின் அறிவுறுத் தலுக்கு ஏற்ப, பெட்ரோகிராட் சோவியத்தின் புரட்சி ராணுவக்கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. ஒட்டுமொத்த எழுச்சியின் தலைமையகமாக அது செயல்பட்டது.

அக்டோபர் 16ஆம் தேதியன்று, மத்தியக் கமிட்டி அதன் விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தை நடத்தியது. அக்கூட்டம் கட்சியின் தலைவர்களைக் கொண்ட ஒரு மையக்குழுவை (Core) தேர்ந்தெடுத்து, நெருங்கிக் கொண்டிருக்கும் புரட்சி எழுச்சிக்கு தோழர் ஸ்டாலினை தலைவராக்கியது. கட்சியின் இந்த மையக்குழுவானது, பெட்ரோகிராட் சோவியத் புரட்சி ராணுவக் கமிட்டிக்கு தலைமையாக செயல்பட்டதுடன் ஒட்டுமொத்த புரட்சிகர எழுச்சியையும் வழிநடத்தியது. அக்டோபர் 16ல் நடந்த அக்கூட்டத்திலும்கூட, ஜினோவிவ் மற்றும் காமனேவ் ஆகியோர் மீண்டும் எதிர்த்ததுடன் ஊடகத்திற்கு அளித்த அறிக்கையில் போல்ஷ் விக்குகளின் ரகசிய திட்டத்தை கசியவிட்டனர்.

துரோகிகள் இவ்வாறு காட்டிக்கொடுத்ததினால், எதிர்ப்புரட்சியாளர்கள் உடனே தாக்குதல் திட்டத்தைத் துவங்கினர். அக்டோபர் 19ஆம் நாளன்று, தற்காலிக அரசாங்கமானது, யுத்தக்களத் திலிருந்து படைவீரர்களை வாபஸ் பெற்று அவர்களை புரட்சியாளர்களை ஒடுக்க பெட்ரோ கிராடில் நிறுத்தியது. பெட்ரோகிராட் வீதிகளில் படைவீரர்கள் ரோந்து சுற்றி வந்தனர். ஸ்மோல்னி என்ற இடத்திலிருந்த போல்ஷ்விக் கட்சியின் தலைமையகத்தைத் தாக்கி, அதனைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

பெட்ரோகிராட் சோவியத்தின் ஒரு கூட்டத்தில், டிராட்ஸ்கி, ரகசியமாக இருந்த ஆயுத எழுச்சி துவங்கும் தேதியை வெளியிட்டுவிட்டார். அதனால் மத்தியக் கமிட்டியானது, திட்டமிட்டிருந்த தேதிக்கு முன்பாகவே ஆயுத எழுச்சியைத் துவங்கிட முடிவு செய்தது. இரண்டாம் கட்சி மாநாடு துவங்கு வதற்கு முதல் நாளிலேயே ஆயுத எழுச்சி துவக்கப் படவேண்டும் எனத் தீர்மானித்தது.

## உலகைக் குலுக்கிய அந்த நாட்கள்

அக்டோபர் 24ஆம் நாள், (புதிய நாட்காட்டி யின்படி நவம்பர் 6) அதிகாலையில் கெரென்ஸ்கி அரசாங்கம், கட்சியின் மத்திய ஏடான ரபோச்சு புட்–ஐ (தொழிலாளர்களின் பாதை) மூடிட, பதிப்பாசிரியர் அலுவலகம் மற்றும் அச்சகத்தின் முன்பாக ஆயுதம் தாங்கிய கவச வாகனங்களை நிறுத்தித் தாக்க ஆரம்பித்தது. ஆனால், மாபெரும் ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின்படி, செம்படையினரும் புரட்சிப்படையினரும் அந்தக் கவச வாகனங்களை அப்புறப்படுத்தினர். அதே நாள் காலை 11 மணியளவில், கட்சியின் மத்திய ஏடான ரபோச்சி புட், தற்காலிக அரசாங்கத்தை தூக்கியெறிய வேண்டுமென்ற அறைகூவலுடன் வெளிவந்தது. அதே சமயத்தில் கட்சியின் மையக்குழு கேட்டுக்கொண்டபடி, அனைத்து புரட்சி ராணுவக் குழுக்களும் செம்படையினரும் கட்சியின் மத்தியக் கமிட்டி தலைமையகமான ஸ்மோல்னியை நோக்கி விரைந்தன. எழுச்சி துவங்கிய அன்றிரவே மாபெரும் லெனின் அவர்கள் ஸ்மோல்னி சென்றடைந்து புரட்சிக்கான தலைமையை வழங்கினார். அன்றிரவு முழுவதும் புரட்சிப் படையினர் ஸ்மோல்னியில் ஒன்றுகூடினார்கள். பனிக்கால அரண்மனையைச் சுற்றி வளைத்திட, அவர்களை போல்ஷ்விக்குகள் அனுப்பி வைத்தனர். பனிக்கால அரண்மனையில் தற்காலிக அரசாங்கத்தின் தலைவர்கள் அடைக்கலம் புகுந்திருந்தனர்.

அக்டோபர் 25ஆம் நாள், (புதிய நாட்காட்டியின் படி நவம்பர் 7) ரயில் நிலையம், அஞ்சலகம், தந்தியகம், அமைச்சர்களது அலுவலகம் மற்றும் அரசு வங்கி ஆகியவற்றை புரட்சிகர சக்திகள் கைப்பற்றின. முன்னோட்ட பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஸ்மோல்னி என்ற இடம், புரட்சிக்கான தலைமையகமாக மாறியது. அதே நேரத்தில், கூடவே செம்படைப் பிரிவினரும் பெட்ரோகிராட் தொழிலாளர்களும் ராணுவத்தின் புரட்சிப்படைப் பிரிவுகளுடன் சேர்ந்துகொண்டு, போல்ஷ்விக் கட்சியின் தலைமையிலான மிகப் போற்றத்தக்க, வீரம்செறிந்த யுத்தத்தைத் தொடுத்தனர். கடற்படையும்கூட, சற்றும் பின்தங்கவில்லை. ஆரோரா என்ற போர்க்கப்பல், பனிக்கால அரண் மனையின் மீது பீரங்கியால் சரமாரியாகச் சுட்டது.

அதே அக்டோபர் 25ஆம் நாள், தற்காலிக பூர்ஷ்வா அரசாங்கத்தைத் தூக்கியெறிந்துவிட்டு அரசு அதிகாரத்தை சோவியத்துக்கள் கைப்பற்றி விட்டனர் என்ற செய்தியை பரந்த அளவில் மக்களிடம் துண்டுப் பிரசுரங்களை வினியோகித்து அறிவித்தனர். அன்றிரவில் புரட்சிகரத் தொழிலாளர் களும், படைவீரர்களும் கடற்படை வீரர்களும் பனிக்கால அரண்மனையைத் தாக்கி, தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர்களைக் கைது செய்தனர். பெட்ரோகிராடில் நடந்த ஆயுதக் எழுச்சியில் போல்ஷ்விக்குகள் வெற்றியடைந்தனர். தலை நகரத்தின் அதிகாரம், பெட்ரோகிராட் சோவியத் துக்களின் கைகளுக்கு வந்துவிட்டது.

போல்ஷ்விக் கட்சியின் தலைமையில் உழைக்கும் வர்க்கமானது, ஏழை விவசாயிகள் கூட்டணியுடனும் படைவீரர்கள் மற்றும் கடற்படையினரின் ஆதரவு டனும் பூர்ஷ்வாக்களின் அதிகாரத்தைத் தூக்கி யெறிந்து, சோவியத்துக்களின் அதிகாரத்தை நிறுவி, இரஷ்யாவில் சோசலிச சோவியத் அரசு எனும் ஒரு புதிய குணாம்சத்துடனான அரசை நிறுவியது. நிலப்பிரபுக்களின் உரிமை அகற்றப் பட்டு அவர்களின் நிலங்களனைத்தும் ஏழை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டது. நிலங்களனைத்தும் தேசியமயமாக்கப்பட்டது. மேலும், வங்கிகள், ரயில்வே, அயல்நாட்டு வணிகம், வியாபாரக் கப்பல்கள் இன்னும் பலவற்றுடன் அபகரிப்பாளர்களான முதலாளித்துவவாதிகள் வசமிருந்த பெரும் நிறுவனங்கள் யாவும் தேசியமய மாக்கப்பட்டு, அவைகள் அனைவருக்கும் பொது வானதாக, முழுவதும் மக்களின் சொத்துக்களாக மாற்றப்பட்டன. சோவியத் இரஷ்யாவாக ஆனவுடன் ஜெர்மனிக் கெதிராக நடந்துகொண்டி ருந்த போர் நிறுத்தப்பட்டு, இறுதியில் நாட்டில் அமைதி கொண்டுவரப்பட்டது. அந்த நாடு தனது முழு பலத்தையும் சோசலிச சமுதாயத்தை வளர்த் தெடுப்பதற்காக ஈடுபடுத்திக்கொண்டது.

நவம்பர் புரட்சி, முதலாளித்துவத்தை நொறுக்கித் தள்ளிவிட்டது. அது இரஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவி, இப்பரந்துபட்ட நாட்டின் ஆட்சியை உழைக்கும் வர்க்கத்திடம் ஒப்படைத்து, உழைக்கும் வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக மாற்றியது.

இவ்வாறாக, அம்மாபெரும் புரட்சியானது உலகில் ஒரு புதிய சகாப்தத்தை – சோசலிசப் புரட்சியின் வெற்றிச் சகாப்தத்தைத் துவக்கியிருக்கின்றது ■

*(மாபெரும் நவம்பர் புரட்சி பற்றியக் கட்டுரை பாட்டாளி சிந்தனையில் கடந்த மே மாதத்தில் தொடங்கி செப்டம்பர் இதழ் உடன் முடிவுற்றது)*

## செப்டம்பர் 9

# பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் மாசேதுங் அவர்களின் 41வது நினைவுதினம்




சென்னையில் நடைபெற்ற தோழர் மாசேதுங் நினைவுதினக் கூட்டத்தில் தோழர் ரெங்கசாமி, மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்



தேனியில் தோழர் மாசேதுங் படத்திற்கு தோழர் சத்தியமூர்த்தி, மதுரை–திண்டுக்கல்–தேனி மாவட்ட செயலாளர் மாலை அணிவித்து செவ்வணக்கம் செலுத்துகிறார்

## நீட் தேர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




சென்னையில் நீட் தேர்வுக்கு எதிராக சமூக சமத்துவத்துக்கான மருத்துவர்கள் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் (AIDSO) மாநில தலைவர் தோழர் திலகர் வாழ்த்தி பேசுகிறார்

# மாபெரும் லெனினும் நவம்பர் புரட்சியும்

– பிரவாஸ் கோஷ்

*[ஜூன் 11, 2017 அன்று ஜார்க்கண்ட் மாநிலத்தின் காட்சிலாவில் உள்ள 'மார்க்சிசம்– லெனினிசம்– சிப்தாஸ் கோஷ் சிந்தனை படிப்பு மையத்தில்" ஒடிசா மாநிலக் கமிட்டி ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் நவம்பர் புரட்சியில் மாபெரும் லெனின் அவர்களின் பங்களிப்புக்கள் குறித்து சுருக்கமாகப் பேசினார். இவ்வுரையானது நவம்பர் புரட்சியின் முக்கியத்துவம் குறித்தும் அதில் லெனினின் சரித்திரபூர்வ பங்கு குறித்தும் புரிந்து கொள்ள அனைத்துப் பிரிவு மக்களுக்கும் உதவி புரியும் என நாங்கள் கருதுகிறோம். எமது ஆங்கில ஏடான புரோலிடேரியன் எராவில் வெளிவந்த அவ்வுரையை தமிழில் மொழிபெயர்த்துள்ளோம். மொழி பெயர்ப்பில் பிழையேதுமிருப்பின் அல்லது வெளிப்படுத்துதலில் போதாமையேதுமிருப்பின் அதற்கு பாட்டாளி சிந்தனையின் பதிப்பாசிரியர் குழுவே பொறுப்பாவோம் ]*

தோழர்களே,

ஏதாவது ஒரு தலைப்பின் மீது விவாதித்திட நான் இங்கே வரவில்லை. உங்களது ஆழமான விவாதங்களை உற்றுக் கேட்பதற்காகவே வந்திருக்கின்றேன். அவ்வாறு கேட்கையில் நவம்பர் புரட்சியின்போது மாபெரும் லெனின் ஆற்றிய பங்கு குறித்து ஒன்றைக் கூறவேண்டிய தேவையானது எனக்கு ஏற்பட்டது.

இவ்விஷயத்தில் நமது மாபெரும் தலைவரும் ஆசானும் வழிகாட்டியுமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் மதிப்பு வாய்ந்த விவாதங்களில் தோழர்கள் நன்கு பரிச்சயம் கொண்டுள்ளனர். அதன் பின்னர் வந்த, கட்சியின் சில வெளியீடுகள் குறித்து தோழர்களுக்குத் தெரிந்திருக்கும். புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் தோழர் லெனின் ஆற்றிய சரித்திரபூர்வ பங்கின் சில அம்சங்களை நான் குறிப்பிடுகிறேன்.

மாபெரும் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் ஆகியோர் இயக்கவியல் பொருள்முதல்வாதத்திற்கு அடித்தளமிட்டு அத்தத்துவத்தின் அடிப்படையில் அறிவு, அரசியல், பொருளாதாரம், சரித்திரம், சமூகவியல், இலக்கியம், கலாச்சாரம் ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய அறிவாதாரக் களங்களில் மதிப்பு வாய்ந்த வழங்கல்களைச் செய்தார்கள் என்பது நீங்களனைவரும் அறிந்ததே. அவர்களது காலத்தில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் நிகழ்வுகள் கற்றுத் தந்த ஆய்வினையும் அவர்கள் வழங்கினார்கள்.

மார்க்ஸ் அவர்கள் உழைக்கும் வர்க்கப் புரட்சிக்கு வழிகாட்டக்கூடிய ஓர் அமைப்பான முதல் அகிலத்தை நிறுவினார். முதல் அகிலமானது சீரழிந்துவிட்ட நிலையில் எங்கெல்ஸ் அவர்கள் இரண்டாம் அகிலத்தினை உருவாக்கினார். மார்க்ஸ் அவர்களின் மறைவிற்குப் பின்னர் எங்கெல்ஸ் அவர்கள் 12 ஆண்டுகள் உயிர்வாழ்ந்தார். அவரது தலைமையின்கீழ் இரண்டாம் அகிலம் முறையாகச் செயல்பட்டது. எங்கெல்ஸ்ஸின் மறைவிற்குப் பின்னரும்கூட சில காலம் அது சரியான பாதையில் சென்றது. இரண்டாம் அகிலத்தின் தலைமையின் கீழ் ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தில் பல சக்திவாய்ந்த உழைக்கும் வர்க்கக் கட்சிகள் உருவாக்கப்பட்டன.

மார்க்சிய இயக்கத்தில் லெனின் இணைந்த சமயம் இரண்டாம் அகிலமானது ஒரு சக்திவாய்ந்த அமைப்பாக இருந்தது. அதன் தலைவர்களை லெனின் தனது ஆசான்களாக ஏற்றுக்கொண்டார். அதே நேரத்தில், இரஷ்ய மண்ணில் மார்க்சிஸ்ட் கட்சியாக இரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியானது (ஆர் எஸ் டி எல் பி–RSDLP) உருவாக்கப்பட்டது. அதில் லெனின் தன்னை இணைத்துக்கொண்டிருந்தார். பேர்ன்ஸ்டைன், காவுட்ஸ்கி மற்றும் பிறரைக்கொண்ட தலைவர்களை இரண்டாம் அகிலம் கொண்டிருந்தது. பிளக்கனோவ் மற்றும் பிறர் ஆர் எஸ் டி எல் பி யின் தலைமைப் பொறுப்பில் இருந்தனர்.

பிற்காலத்தில் மார்க்சிசத்தின் உட்கருவைப் பாதுகாத்திடவும் அதன் சரியான விளக்கத்தை வழங்கிடவும் லெனின் இத்தகைய தலைவர்களைக் கடுமையாக எதிர்த்திட வேண்டியிருந்தது. இவ்விஷயத்தில் லெனின் ஒரு சரித்திரபூர்வ பங்கினை ஆற்றினார். அந்நேரத்தில், அவர் உண்மையில் இரண்டாம் அகிலத்தில் அறியப்படாதவராக இருந்தார். இரஷ்யாவிலும்கூட, அந்த அளவிற்கு அவர் அறியப்படாதவராகத்தான் இருந்தார். வயதிலும்கூட, நான் மேலே குறிப்பிட்ட அனைத்துத் தலைவர்களைக் காட்டிலும் மிகவும் இளையவராக இருந்தார்.

அந்த இளம் வயதில் எந்த அளவிற்கு மார்க்சிசப் புரிதலைப் பெற்றிருந்தார், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் மீது எத்தகைய ஆழமான உணர்வினைக் கொண்டிருந்தார், எத்தகைய மட்டத்திலான உண்மைத்தன்மையை அவர் அடையப்பெற்றிருந்தார், எத்தகைய தளர்வுறாத தைரியத்தை அவர் அடையப் பெற்றிருந்தார், இந்த சரித்திரப் பூர்வ போராட்டத்தை நடத்திடுவதற்கான எத்தகைய திடமான மனவுறுதியையும் தீர்மானத்தையும் அவர் கொண்டிருந்தார் என்பதை நினைத்துப்பாருங்கள். முன்னதாக, அவர்களை அவரது தலைவர்கள் மற்றும் ஆசான்களாக அவர் ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதை நான் ஏற்கனவே கூறினேன். லெனினது நூல்களைப் படித்திருப்பவர்கள், இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் எவ்வாறு மார்க்சிசத்தை திரித்துக் கூறி தவறாக விளக்கிக்கொண்டிருந்தார்கள் என்பதைக் காணலாம்.

## தவறான விளக்கத்திலிருந்து லெனின் மார்க்சிசத்தைத் தற்காத்தார்

இத்தகைய தலைவர்களைப் பற்றி விவாதிக்கும் போதும் மற்றும் அவர்களைக் குறிப்பிடும்போதும், "அவர்கள் மார்க்சிஸ்டுகளாயிருந்த போது" என்றே அவர்களைத் தரப்படுத்தினார். இதன் பொருள், அவர்கள் மார்க்சிஸ்டுகளாயிருந்தபோது அவர்களது விளக்கங்கள் சரியாகத்தான் இருந்தது என்பதாகும். ஆனால், இரண்டாம் அகிலத்தின் இதே தலைவர்கள் மார்க்சியத்திலிருந்து விலகிச்சென்று தவறான விஷயங்களைக் கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் பெரும் ஏகாதிபத்திய சக்திகள் பிற நாடுகளைக் கொள்ளையடித்து பெருஞ்செல்வத்தை குவித்திருந்தனர். அத்தகைய செல்வத்தின் ஒரு பகுதியைச் செலவழித்து அப்போதிருந்த ஐரோப்பாவின் பெரும்பாலான உழைக்கும் வர்க்கத் தலைவர்களை லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கிவிட்டனர். அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆகிக்கொண்டும் சட்டசபையினுள் உரைகளை நிகழ்த்திக்கொண்டும் அத்தகைய உரைகள் அச்சு ஊடகங்களில் வருவதைக் கண்டும் மற்றும் அதன் மூலம் புகழடைந்துகொண்டும் பூர்ஷ்வா பாராளுமன்றவாதத்தின் ஒரு சொகுசான சூழலில் இரண்டாம் அகிலத்தின் அனைத்துத் தலைவர்களும் அதனுள் மூழ்கிப்போய், அவர்களின் புரட்சிகர குணாம்சத்தினை இழந்து உண்மையில் அவர்கள் தங்களை ஆளும் ஏகாதிபத்தியவாதிகளிடம் விற்றுவிட்டனர். அதன் விளைவாக, சமரசத்தில் நாட்டம் கொண்டு, புரட்சிகரப் போராட்டத்தில் வெறுப்புற்று, ஐரோப்பாவின் உழைக்கும் வர்க்க இயக்கத்தின் பெரும்பான்மையான தலைவர்கள் ஊழலில் மூழ்கிவிட்டனர்.

அதனை லெனினால் உணர்ந்திட முடிந்தது. லெனின் மார்க்சிசத்தின் சாராம்சத்தையும் மார்க்சியப் பகுப்பாயும் முறையியலையும் கிரகித்துக்கொண்டு புறவய சூழ்நிலையை சரியாகப் புரிந்துகொள்வதில் உண்மையைக் கண்டிட மார்க்சிசப் போதனைகளைப் பிரயோகிக்கும் திறனைப் போராட்டத்தின் மூலம் பெற்றிருந்தார். ஒரே வார்த்தையில் கூறுவதானால், ஒரு ஸ்தூலமான சூழ்நிலையில் எவ்வாறு மார்க்சிசத்தை சரியாகவும் பருண்மையாகவும் பிரயோகிக்க வேண்டும் என்பதை அவர் கற்றிருந்தார். ஆதலால், மார்க்சிச விலகலாளர்கள் பிடியிலிருந்து அவர் மார்க்சிசத்தைப் பாதுகாத்தார். இத்தகைய அவரது பாத்திரமானது சர்வதேசிய களத்தில் முனைப்பான ஒன்றாகும்.

இதுவரை, எனக்குத்தெரிந்தவரையில், முதன் முதலாக 'திருத்தல்வாதம்' என்ற சொல்லைப் பிரயோகித்தவர் லெனின்தான். மார்க்சிசத்திலிருந்து விலகிச் சென்ற அத்தகைய தலைவர்கள் மார்க்சிசத்தைத் திருத்திட முயன்றுகொண்டிருந்தனர், அதனால்தான் அவர்கள் திருத்தல்வாதிகளாயிருந்தனர் என லெனின் காண்பித்தார். இத்தகைய சீரழிந்துவிட்ட தலைவர்கள் மார்க்சிசத்தின் புரட்சிகர சாராம்சத்தை திரித்துக்கூறி, தவறாகச் சித்தரித்து அதனை துகிலுரித்து பூர்ஷ்வாக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் திரிக்கப்பட்ட மார்க்சிச வடிவத்தை பரப்பிக்கொண்டிருந்தனர். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இத்தகைய திரித்துக்கூறப்பட்ட மார்க்சிய வடிவத்தில் ஆட்சேபணைக்குரிய எதுவுமில்லை என பூர்ஷ்வாக்கள் எண்ணுவார்கள். எனவே லெனின் அவர்கள், இத்தகைய தலைவர்கள் மார்க்சிசத்தை தவறாக விளக்கியதன் மூலம் அதன் திரிக்கப்பட்ட வடிவத்தை வழங்கிக்கொண்டிருந்தனர் என்றார்.

மார்க்சிசத்தின் புரட்சிகரப் புரிதல் என்பது என்ன? மார்க்சிசத்தின் சரியான புரிதல் என்பது என்ன? அதனை லெனின் தான் முதன் முதலாக உலகிற்கு அந்நேரத்தில் சுட்டிக் காண்பித்தார். இங்குதான் அவரது முதன்மையான சரித்திரபூர்வப் பாத்திரமானது இருக்கின்றது.

## முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த கட்டம் ஏகாதிபத்தியம் என்ற லெனினது விளக்கம்

சரித்திரப்புகழுக்கு சற்றும் குறையாத அளவிற்கு அவர் வகித்த பாத்திரம் மற்றுமொன்றும் உள்ளது. மார்க்ஸ் அவர்கள் ஏகாதிபத்தியத்திற்கு முந்தைய காலகட்டத்தில் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைப் பிரயோகித்தார். மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் ஆகியோர் ஏகாதிபத்திய சகாப்தத்தைப் பார்த்ததில்லை. எங்கெல்ஸ் மறைவுற்ற சில ஆண்டுகளுக்குப் பின்பு, ஏகபோகம் மற்றும் நிதி மூலதனத்தைப் பிறப்பித்ததின் மூலம் முதலாளித்துவமானது ஏகாதிபத்திய நிலையை அடையப்பெற்றுமலிவான உழைப்பையும் மூலப்பொருட்களையும் சுரண்டி வளர்ச்சிகுன்றிய நாடுகளைக் கொள்ளையடித்திடத் துவங்கியது.

முதலாளித்துவமானது அதன் வளர்ச்சிப் போக்கில் ஏகபோகத்தைப் பிறப்பித்து அதன் பின்னர் அதன் மிக உயர்ந்த கட்டமான ஏகாதிபத்திய நிலையை அடைந்துவிட்டது என லெனின் காண்பித்தார். அது முதலாளித்துவத்தின் சாகும் தருவாயை அடையாளப்படுத்தியது. அவர் ஏகாதிபத்தியத்தின் தன்மையையும் அம்சங்களையும்கூட விரித்துரைத்து, ஏகாதிபத்திய சகாப்தத்தில் புரட்சியின் பாதையை, புரட்சிகர அரசியலை, புரட்சிக்கான உத்திகள் மற்றும் தந்திரோபாயங்களைக் கண்டறிந்தார். இதன் காரணமாகத்தான் மாபெரும் ஸ்டாலின் அவர்கள் விரிவான ஆய்வு மூலம் ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் என்ற இச்சகாப்தத்தின் மார்க்சிசம் லெனினிசமே என்று காண்பித்தார்.

புரட்சியானது முதலில் முன்னேறிய நாடுகளில்தான் வெடிக்கும் என மார்க்ஸ் அவர்கள் அவரது காலத்தில் கூறியிருந்தது சரியே. ஆனால் லெனின் அவர்கள் மார்க்சிசப் பகுப்பாய்வு முறையியலைப் பிரயோகித்தின் வாயிலாக, ஏகாதிபத்திய கட்டத்தை அடைந்த பின்னர், முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் காலனி நாடுகளைக் கொள்ளையடித்துக் கொண்டு தம் சொந்த நாட்டு தொழிலாளர்களை லஞ்சம் கொடுத்து வாங்கிடும் பொருட்டு கொள்ளையடித்த செல்வத்தின் ஒரு பகுதியை அவர்களுக்கு கூடுதல் ஊதியமாகவும் போனஸாகவும் வழங்கிக் கொண்டிருக்கின்றனர் என்று காண்பித்தார். இது தொழிலாளர்களைப் பெருமளவில் கெடுத்து அவர்களது போராடும் உத்வேகத்தை அழித்தொழித்து விட்டது. இப்போது, அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் அதிகம் உள்ளாக்கப்படும் ஒப்பீட்டளவில் பின்தங்கிய நாடுகளில்தான் புரட்சியானது முதலில் நடைபெறும். அதன் பின்னர், நெருக்கடியானது முன்னேறிய முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளில் தீவிரமடைந்து மிக மோசமான நிலையை அடைந்து அது புரட்சி வெடித்தெழுவதற்கான வழியைத் திறந்துவிடும்.

மார்க்ஸ்–ஐ மதிக்கவில்லையென இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் லெனினைக் குற்றம் சாட்டினர். அவர்கள் மார்க்சிசத்தின் பக்கம் நில்லாமல் அதனைக் கீழே போட்டுவிட்டனர் என லெனின் அதற்குப் பதிலளித்தார். பின்தங்கிய நாடுகளில் மட்டுமே உலக ஏகாதிபத்திய–முதலாளித்துவத்தின் சங்கிலியானது முதலில் உடைக்கப்படும் என்பதை லெனின் காண்பித்தார். இந்நாடுகளில் புரட்சியானது மென்மேலும் வெற்றிகரமாகும். முன்னேறிய ஏகாதிபத்திய நாடுகள் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகி, இந்நாடுகளின் உழைக்கும் வர்க்கத்தினர் மேலும் மேலும் புரட்சியை நோக்கிச் செல்லத் துவங்கிடுவர்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, முதன் முதலாக லெனின் அவர்கள்தான் கீழ்க்கண்டவாறு ஏகாதிபத்தியத்தின் பிரதான அம்சங்களை விளக்கிக்கூறியுள்ளார்:

i) ஏகபோக மூலதன வளர்ச்சி

ii) வங்கி மூலதனத்துடன் தொழில் மூலதனத்தை இணைப்பதன் மூலம் உருவாகும் நிதி மூலதனம்

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மாபெரும் லெனினும் நவம்பர் புரட்சியும்

# மார்க்சிசத்தை சரியாக உட்கிரகித்துக்கொண்டு, லெனின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச்சென்றார்

5ம் பக்கத் தொடர்ச்சி

iii) பின்தங்கிய நாடுகளுக்கு சரக்கு ஏற்றுமதி மட்டுமின்றி மூலதனத்தையும் ஏற்றுமதி செய்வது

iv) உலகச் சந்தையைச் சுரண்டுவதற்காக ஏகாதிபத்தியவாதிகளின் சர்வதேச டிரஸ்ட் மற்றும் கார்ட்டல்களை (இவை இப்போது பன்னாட்டு கார்ப்பொரேட்டுகள் எனும் வடிவத்தை எடுத்துள்ளன) உருவாக்குவது

V) வரம்பில்லாமல் கொள்ளையடித்திட பெரும் ஏகாதிபத்திய–முதலளித்துவ சக்திகள் தங்களுக்குள் உலகச் சந்தயைப் பிரித்துக்கொள்ளுதல்

எல்லையில்லாமல் சூறையாடிடவும் கொள்ளையடித்திடவும் சந்தைகளைப் பிடிப்பதற்காகவும் மீண்டும் பிடிப்பதற்காகவும் உலகப்போர் உள்ளிட்ட போர்களை ஏகாதிபத்தியம் உருவாக்குகின்றது என லெனின் காண்பித்தார். ஒப்பீட்டளவில் சுதந்திர இறையாண்மைகொண்ட நாடுகளின் பொருளாதாரங்களையும் அவற்றின் வெளியுறவுக் கொள்கைகளையும்கூட கட்டுப்படுத்துமளவிற்கு நிதிமூலதனமானது மிகவும் சக்திவாய்ந்த மற்றும் ஒரு தீர்மானகரமான சக்தியெனவும் அவர் மேலும் கூறினார்.

ஏகாதிபத்தியம் அதன் துவக்கக் கட்டத்தில் தோற்றுவித்த மற்றுமொரு அம்சத்தையும் அவர் சுட்டிக் காண்பித்தார். லாபத்தை அறுவடை செய்திட காலனி நாடுகளிலும், அரைக்காலனி நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் மூலதனத்தை முதலீடு செய்வதை ஏகாதிபத்தியவாதிகள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அத்தகைய முதலீட்டில் எவ்வித இழப்பும் ஏற்படாதிருக்கும்வண்ணம் மற்றொரு வழிவகை திறந்துவிடப்பட்டது. அது யாதெனில், மூலதனத்தை நேரடியாக முதலீடு செய்யாமல் அதிக வட்டியில் கடன் வழங்கிக்கொண்டும் அல்லது பங்குச்சந்தையில் யூக வணிகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதும் ஆகும். இத்தகைய பெரும் வட்டிக் கடன் கொடுப்பதில் குறைவான ஆபத்து இருப்பதை அவர்கள் கண்டனர். கடும் வட்டியில் மிகப்பெரும் கடன் வழங்கும் மிகக்குறைவான ஆபத்தைக்கொண்ட வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டு அதன் மூலம் நல்ல லாபத்தை அடைந்து கொண்டிருக்கின்ற இதனை லெனின் அவர்கள் வாடகை வட்டி (Rentier) அதாவது பெரும் வட்டி (usurious) நிதி மூலதனம் என முத்திரையிட்டார்.

லெனின் அவர்கள் அன்றைய நாட்களில் பார்த்ததை ஒப்பிடுகையில் இன்று அத்தகைய பெரும் வட்டி வியாபாரம் பல மடங்கு தழைத்தோங்கியுள்ளது. ஏகாதிபத்தியத்திற்கு முந்தைய கட்டத்தில், முதலாளித்துவமானது ஜனநாயகத்தையும் தனிநபர் சுதந்திரத்தையும் அதிகம் பற்றிக் கொண்டிருந்தது எனவும் காண்பித்தார். ஆனால், ஏகாதிபத்திய கட்டத்தில் அது அதிகாரத்துவத்தையும் ராணுவத்தையும் அதிகமாகப் பற்றிக் கொண்டிருக்கின்றது.

### இரண்டாம் அகிலத்தின் சீரழிவு

முதல் உலகப் போருக்கு முன்னர், போர் மூண்டவுடன் ஏகாதிபத்திய நாடுகளிலிருக்கும் உழைக்கும் வர்க்கத்தின் பாத்திரம் பற்றிய கேள்வியில் லெனினுடன் இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் கடுமையான வேறுபாட்டைக் கொண்டிருந்தனர்.

தங்கள் நாட்டின் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் நலன்களுக்காக பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் துப்பாக்கி யேந்தி நிற்கக்கூடாது என லெனின் கருதினார். அவர்களின் கடமையானது, ஏகாதிபத்தியப் போரை எதிர்ப்பதும் போரைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பாட்டாளி வர்க்கப் புரட்சியை நிறை வேற்றிட தத்தம் நாடுகளில் உள்நாட்டுப் போர்களை கிளர்ந்தெழச்செய்வதும் ஆகும் என்றார்.

வாய்மொழியளவில் லெனினது கருத்தை இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் ஆதரித்து அவரது முன்மொழிவை ஏற்றுக்கொண்டாலும், போர் மூண்ட பின்னர், அந்தர்பல்டியடித்து அந்தந்த நாடுகளின் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக அவர்கள் நின்றார்கள். லெனின் அவர்கள் இதனை சர்வ தேசியத்திற்கு இழைத்த துரோகம் என அழைத்ததுடன், முதல் உலகப் போரின் சாதகத்தை முழுமையாகப் பயன்படுத்திகொண்டு அவரது நாட்டில் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றினார். இவ்வாறாக அவர், தனது தீர்க்கதரிசனம் சரித் தன்மையை நிரூபித்துக் காட்டினார்.

இரஷ்யா போன்றதொரு பின்தங்கிய நாட்டில் சோசலிசப் புரட்சியை நிறைவேற்றிட முடியுமா என்ற கேள்வியிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதன் அவசியம் என்ற கேள்வியிலும் லெனின் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களுடன் தீவிர கருத்துவேறுபாட்டைக் கொண்டிருந்தார். இந்த அனைத்து காரணங்களி னாலும், அவர் இரண்டாம் அகிலத்தை துரோகி எனவும் திருத்தல்வாதி எனவும் முத்திரையிட்டு அதனுடனான தொடர்பை அவர் துண்டித்துக் கொண்டார்.

### ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவது குறித்து

ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவது பற்றியது அவரது மற்றுமொரு மதிப்புவாய்ந்த பங்களிப்பாகும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் இதனை லெனினிச மாதிரி கட்சியை உருவாக்குதல் என்றழைத்ததுடன் அக்கோட்பாட்டை மேலும் வளர்த்தெடுத்து செழுமைப்படுத்தினார். இவ்விஷயத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் அவரது பிரசித்திபெற்ற, 'எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஏன் இந்தியாவின் ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி' என்ற நூலில் விரிவாக விவாதித்துள்ளார். அந்நூலை தோழர்கள் உன்னிப்பாகப் படித்தார்களேயானால், இது குறித்த அனைத்து விபரங்களையும் அவர்கள் அறிந்துகொள்ளலாம்.

ஒருபுறம், ஆர் எஸ் டி எல் பி யினுள் இருந்த நேரத்தில், அதன் தலைவர்களான பிளக்கனோவ், மார்ட்டோவ் மற்றும் ஆக்செல்ராட் போன்ற தலைவர்களுடன் சில முக்கியக் கேள்விகளில் லெனின் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். அத்தகையவற்றில் ஒன்று, ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவதற்கு மேற்கொள்ளவேண்டிய செயல்முறைப்போக்கு குறித்த அடிப்படைக் கேள்வியாகும்.

அதற்காக, ஒரு சித்தாந்தப் போராட்ட போக்கின் மூலமாக முதலில் ஒரு கருத்தொற்றுமை வளர்த்தெடுக்கப்படல் வேண்டும் என லெனின் கூறினார். தத்துவார்த்த மத்தியத்துவம் ஏற்படுத்திடும் இக்கோட்பாட்டை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் மேலும் விரித்துரைத்தார். வெறுமனே ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டோ அல்லது சில பிரகடனங்களை அறிவித்துக்கொண்டோ ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிட முடியாது என லெனின் கருதினார். முக்கியக் கடமையாக, முதலில் ஓர் சித்தாந்தப் போராட்டத்தை நடத்துவதின் மூலம் கருத்துக்களின் ஒற்றுமை எய்தப்படல் வேண்டும்.

அடுத்ததாக, கட்சியில் எவர் உறுப்பினராக இருக்க முடியும் என்பதாகும். கட்சியின் உறுப்பினர்களாக வாழ்முறை புரட்சியாளர் அன்றி வேறெவரும் இருக்க முடியாது என லெனின் உறுதியாகக் கூறினார். கட்சியின் கொள்கைகளையும் ஆய்வுகளையும் எவரெல்லாம் ஏற்கின்றனரோ அவர்களெல்லாம் உறுப்பினராக ஆகலாம் என மற்றவர்கள் கருத்து கொண்டிருந்தனர். இதனை லெனின் மறுத்தார்.

இது ஏற்கப் பட்டால் எவர் வேண்டுமானாலும் கட்சியின் உறுப்பினராக ஆகிவிடலாம். ஒரு புரட்சிகர உழைக்கும் வர்க்கத்தின் கட்சியானது இவ்வாறு ஒருபோதும் வளர முடியாது. கட்சியின் விதிமுறைகளையும் கோட்பாடுகளையும் உறுப்பினர்கள் கடைபிடிக்கின்றனரா என்பதும் கட்சியின் ஒழுங்கு முறையைக் கடைபிடித்துக் கொண்டு ஏதேனும் ஒரு கட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றுகின்றனரா என்பதை ஆராய்வது முக்கியமாகும். இதன் காரணமாக ஆர் எஸ் டி எல் பி போல்ஷ்விக்குகள் மற்றும் மென்ஷ்விக்குகள் என இரு குழுக்களாகப் பிளவுற்றது. பின்னர் 1912ல் போல்ஷ்விக் கட்சி முறையாக உருவாக்கப்பட்டது.

ஆக, லெனின் அவர்கள்தான் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ்ஸின் மதிப்புவாய்ந்த தொடர்ச்சியாளராக, ஒரு கம்யூனிஸ்ட் கட்சியானது எவ்வாறு உருவாக்கப்படல் வேண்டும், பாட்டாளி வர்க்க ஜனநாயகம் மற்றும் மத்தியத்துவத்தை இணைப்பதின் மூலம் எவ்வாறு ஜனநாயக மத்தியத்துவம் வளரும், பல்வேறு கட்சி அமைப்புகள் பல்வேறு மட்டங்களில் எவ்வாறு வளர்ச்சியடையும் மற்றும் அவற்றிற்கிடையிலான பரஸ்பர உறவுகள் எவ்வாறிருக்க வேண்டும் மற்றும் கட்சியின் அத்தாரிட்டிக்குக் கீழ்ப்படிந்து கட்சி உறுப்பினர்கள் ஒரு ஒழுங்கு முறையில் அவர்களே எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் போன்ற எண்ணற்ற கேள்விகளில் சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார்.

### பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் குறித்து

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கேள்வியை மையமாக வைத்த விவாதங்களும் நடைபெற்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது முதலாளித்துவம் மற்றும் கம்யூனிசத்திற்கும் இடையேயான மாறுகின்ற இடைப்பட்ட கட்டம் என மார்க்ஸ் கூறியிருக்கின்றார். அதனை லெனின் நடைமுறைப்படுத்திட முயற்சித்தபோது, ஜனநாயகத்தை கொலைசெய்கின்றார் என மற்றவர்கள் லெனினைக் குற்றம்சாட்டினர். அவர்கள் மிகவும் கவலைப்படுகின்ற ஜனநாயகம் என்பது பூர்ஷ்வா சர்வாதிகாரம் அன்றி வேறெதுவுமில்லை என்பதைச் லெனின் சுட்டிக்காண்பித்து அவர்கள் கூற்றை நிராகரித்தார்.

அதாவது, அவர்களின் ஜனநாயகம் என்பது பூர்ஷ்வாக்களுக்குச் சாதகமானதாகவும் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான சர்வாதிகாரமாகவும் இருக்கும் என்பதாகும். அதற்கு மாறாக, சோசலிசம் என்பது உழைக்கும் வர்க்கத்திற்கான ஜனநாயகமாகவும் பூர்ஷ்வாக்களுக்கு எதிரான சர்வாதிகாரமாகவும் இருக்கும்.

லெனின் அவர்கள் மார்க்ஸ்ஸின் இக்கோட்பாட்டை பல்வேறு கோணங்களிலும் வளர்த்தெடுத்துள்ளார். அமைதிவழி மூலமாக புரட்சியை அடையப் பெற முடியாது என மார்க்ஸ்தான் விளக்கியுள்ளார். பாரிஸ் கம்யூனின் அனுபவத்தின் அடிப்படையில், உழைக்கும் வர்க்கம் பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை உடைத்தெறிந்தாக வேண்டும் என்றும்கூட மார்க்ஸ் கற்றுத்தந்துள்ளார்.

### மார்க்சிய அறிவியலின் தொடர்ச்சியான வளர்ச்சி குறித்து

மற்றொரு களத்தில் லெனினது பாத்திரம் சிறந்த வழிகாட்டலைத் தரவல்லதாக அமைந்துள்ளது. மார்க்ஸ்–எங்கெல்ஸுக்குப் பிந்தைய காலத்தில் பூர்ஷ்வா கருத்தியலாளர்கள் பல்வேறு வழிகளில் அறிவியலைத் தவறாக விளக்கி மார்க்சிசத்திற்கு எதிராக மீண்டும் புதிதாகப் பிரச்சாரம் செய்து வந்தனர். இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக மார்க்சிசத்தைத் தற்காத்திடுவது அவசியமாகப் பட்டது. லெனின் அதனைச் செய்தார்.

மேலும் அதன் போக்கில், மார்க்சிய அறிவியலையும்கூட அவர் வளர்த்தெடுத்தார். இரஷ்யாவின் மார்க்சியக் கருத்தியலாளர்கள் என்றழைக்கப்பட்ட பசரோவ், போக்டனோவ் மற்றும் லுனாசார்ஸ்கி போன்றவர்களுக்கு எதிராகவும் அவரது வெளிநாட்டு நண்பர்களுக்கு எதிராகவும்கூட அவர் தீவிர சித்தாந்தப் போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது. லெனின் மார்க்சிசத்தை ஒரு வறட்டுவாதமாக ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, ஒரு ஆக்கபூர்வ வளரும் அறிவியலாகவும் செயல் பாட்டிற்கான வழிகாட்டியாகவும் அதனை ஏற்றுக்கொண்டார்.

இது விஷயமாக அவரது புகழ்பெற்ற பொன்மொழியான, "மார்க்சிய கருத்தியலை முழுமை பெற்ற ஒன்று என்றோ மற்றும் மீறமுடியாத ஒன்று என்றோ நாங்கள் கருதவில்லை; மாறாக, அது அறிவியலின் அடிக்கல்லை மட்டுமே நாட்டியிருக்கின்றது என்றும் வாழ்க்கை வேகத்துடன் நடைபோட வேண்டுமென சோசலிசவாதிகள் விரும்பினால் அவர்கள் அனைத்துத் திசைகளிலும் அதனை வளர்த்தெடுத்தாக வேண்டும்" என்று ஒன்று உள்ளது. (ரபோச்சயா கசெட்டாவுக்கான கட்டுரைகள், தொகுப்பு நூல், தொகுதி IV, பக்கம் 211–12)

மார்க்ஸ்–எங்கெல்ஸுக்குப்பின் ஏகாதிபத்திய சகாப்தத்தில் லெனின் இக்கடமையை அற்புதமாக செய்தார். இதன் காரணமாகத்தான் அவரது மதிப்புமிக்க மாணவரான மாபெரும் ஸ்டாலின் அவர்கள், "ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியுமான இச்சகாப்தத்தின் மார்க்சிசம் லெனினிசமே" எனக் கூறினார். (லெனினிசத்திற்கான அடித்தளங்கள்) 'லெனினிசம்' எனும் சொல்லை முதன் முதலாகப் பிரயோகித்தவர் ஸ்டாலின் ஆகும்.

அறிவியல் வளர்ச்சியடைந்து கொண்டேயிருப்பதால் மார்க்சிசமும்கூட இணைந்தே ஒரு அறிவியல் தத்துவமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. இதன் வளர்ச்சியானது இருமடங்காகும். ஒன்று, அதன் எங்கும் இருக்கின்ற மூன்று அடிப்படைக் கொள்கைகளாகும், அதாவது i) எதிர்மறை சக்திகளுக்கிடையேயான ஒற்றுமை மற்றும்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## மாபெரும் லெனினும் நவம்பர் புரட்சியும்

# அனைத்துத் தாக்குதல்களிலிருந்தும் லெனின் மார்க்சிசத்தைப் பாதுகாத்து, வளர்த்தெடுத்து, செழுமைப்படுத்தினார்

6ம் பக்கத் தொடர்ச்சி

போராட்டம், ii) அளவு ரீதியிலான மாற்றத்திலிருந்து குணரீதியிலான மாற்றத்திற்குச் செல்வது மற்றும் எதிர்மறை செயல்பாடு iii) மறுதலித்தலின் மறுதலிப்பு.

இதை விளக்கிடவேண்டுமானால், நியூட்டன் பருப்பொருளின் இயக்கவிதிகளைக் கண்டுபிடித்தார், அறிவியல் மென்மேலும் வளர்ச்சியடைகையில் பருப்பொருளின் இயக்கம் குறித்த கோட்பாடானது வளர்ச்சியுற்று மேலும் செழுமைப்படுத்தப்படுகிறது. அது போலவே, அறிவியல் மற்றும் அறிவாதார முறையியல் (Epistemology) களங்களில் ஏற்படும் வளர்ச்சிகளுக்கு ஏற்ப மார்க்சிசத்தின் மூன்று கோட்பாடுகளின் புரிதலும்கூட வளர்ச்சியடைந்து மேலும் செழுமைப்படுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது.

தேசிய அளவிலும் மற்றும் சர்வதேசிய அளவிலும் புதிதாகத் தோன்றுகின்ற சூழ்நிலைகளில் புரட்சிக்கான அரசியல் பாதை மற்றும் உத்தியை உருவாக்குவது என்பது மற்றுமொரு வளர்ச்சியாகும். அதே சமயம், அவ்வப்போது புறவயச் சூழ்நிலையில் அடிப்படை மாற்றம் ஏற்படுகையில், புதிதாகத் தோன்றியுள்ள சூழலில் தெளிவாக வழிகாட்டவல்ல புதிய புரட்சிகர அரசியல் பாதையையும் உத்தியையும் கண்டுபிடித்தாக வேண்டும். அதனால்தான் லெனின் அவர்கள், மாறிய சர்வதேச சூழ்நிலையில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச்செல்வதற்கான வழிகாட்டிட புதிய அரசியல் பாதையையும் உத்தியையும் கண்டறிந்தது மட்டுமல்லாமல், அவர் இத்தகைய பொதுவான பாதை பல்வேறு நாடுகளில் அப்படியே சரியாக எதிரொலிக்காது என்பதைப் போதுமான அளவிற்குத் தெளிவுபடுத்தினார்.

அவரது வார்த்தைகளில் கூறுவதானால், "மார்க்சியக் கருத்தியலின் தனிப்பட்ட விரித்துரைத்தல் என்பது குறிப்பாக இரஷ்ய சோசலிஸ்டுகளுக்கு அத்தியாவசியமாக இருக்கின்றது என நாங்கள் நினைக்கின்றோம்; இக்கருத்தியல் பொதுவான வழிகாட்டும் கொள்கைகளை மட்டுமே வழங்குவதால், அது குறிப்பாக பிரான்சிலிருந்து வேறுபட்டு இங்கிலாந்தில் பிரயோகிக்கப்படுகிறது, ஜெர்மனியிலிருந்து வேறுபட்டு பிரான்சில் பிரயோகிக்கப்படுகிறது, இரஷ்யாவிலிருந்து வேறுபட்டு ஜெர்மனியில் பிரயோகிக்கப்படுகிறது. " (அதே நூலில் உள்ளது).

ஆக, மார்க்ஸ் காலத்தில் எழாத பிரச்சினைகளை லெனின் எதிர்கொண்டார் என்பதைக் காணலாம். புதிதாகத் தோன்றிக்கொண்டிருந்த பிரச்சினைகளைத் தீர்த்துவைத்திடுவதற்கான வழிகாட்டுதலை வழங்கிடும் போக்கில் லெனின் மார்க்சிசத்தை செழுமைப்படுத்தி, அதன் புரிதலை ஒரு புதிய உச்சத்திற்குக் கொண்டு சென்றார். லெனினுக்குப் பின் ஸ்டாலின், மாசேதுங் மற்றும் தோழர் சிப்தாஸ் கோஷ் ஆகியோர் மார்க்சிசத்தை மேலும் வளர்த்தெடுத்து செழுமைப்படுத்தினார்கள்.

### புரட்சியைக் கட்டியமைப்பது குறித்து

இரஷ்யப் புரட்சியைக் கட்டியமைப்பதில் லெனினது மேதமை எங்ஙனம் செயலாற்றியது என்பதைக் தனியாகக் குறிப்பிடுவதுகூட பொருத்தமாக இருக்கும். ஒரு புறம், தீவிர சித்தாந்தப் போராட்டத்தைத் தொடுத்து அவர் போல்ஷ்விக் கட்சியை நிறுவினார். மற்றொருபுறம், மென்ஷ்விக்குகளையும் குறிப்பிடக்கூடிய பலத்தைக் கொண்டிருந்த சோசலிஸ்ட்–புரட்சியாளர்களையும் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி அதன் மூலம் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பிற உழைக்கும் மக்களிடமிருந்து அவர்களைத் தனிமைப்படுத்திட வேண்டியிருந்தது.

ஒப்பீட்டளவில் முன்னேறிய நாட்டில் நாம் புரட்சியை கட்டியமைத்திட வேண்டியுள்ளதால் தொடர்ச்சியாக நகர மற்றும் கிராமப் பகுதிகளில் கட்சி அமைப்புகளை வளர்த்தெடுத்தல், பல்வேறு நியாயமான கோரிக்கைகளுக்காக வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களைத் தீவிரப்படுத்துதல், சித்தாந்தப் பிரச்சாரத்தை பெரிய அளவில் மேற்கொள்வது அல்லது மக்கள் போராட்டக் கமிட்டிகளை ஏற்படுத்துவது போன்ற இன்று நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் செய்து முடிக்கப்பட்டு அன்று நவம்பர் புரட்சியானது நிறைவேற்றப்படவில்லை.

இரஷ்ய மண்ணில் லெனினது புரட்சிகரச் சிந்தனைகள் பரந்த அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததும் முந்தைய ஆர் எஸ் டி எல் பி யின் உறுப்பினர்கள் அவரை ஆதரித்ததும் உண்மைதான்.

ஜார் ஆட்சிகால இரஷ்யாவில் நெடுநாளைய பாராளுமன்ற அரசியல் செயல்பாட்டிற்கான வாய்ப்பு இருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். டூமா (இரஷ்ய பாராளுமன்றம்) மக்களின் அழுத்தத்ததினால் எப்போதாவது ஏற்படுத்தப்பட்டது. அத்தகைய ஒவ்வொரு டூமாவும் தற்காலிகத்தன்மை கொண்டதாகவும் வரையறைக் குட்பட்ட வாக்குரிமை மற்றும் ஜனநாயக விரோத அரசியலமைப்புச் சட்டம் கொண்டதாகவும் இருந்தது. ஆகவே, பிற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ– ஏகாதிபத்திய நாடுகளில் இருப்பது போன்று இல்லாமல், மக்களிடையே பாராளுமன்ற மாயையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு குறைவாகவே இருந்தது.

இரஷ்ய உழைக்கும் மக்களும் பணத்தாசை காட்டப்பட்டு கெட்டுப்போயிருக்கவில்லை. பிற மேற்கத்திய நாடுகளில் ஏகாதிபத்திய மூலதனம் செய்ய முடிந்த அளவிற்கு பொருளாதார சந்தர்ப்பவாதத்தினால் அவர்கள் அடித்துச்செல்லப்பட வில்லை. ஆதலால், இரஷ்யாவின் தொழிலாளர்கள் ஒப்பீட்டளவில் போர்க்குணம் மிக்கவர்களாக இருந்தனர்.

மேலும், அப்போதைய இரஷ்யாவில் மத நன்மதிப்புக்கள் முற்றிலுமாக அற்றுப்போய்விடவில்லை. பூர்ஷ்வா மனிதாபிமான நன்மதிப்புக்கள் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தன. நம் நாடு உள்ளிட்ட அனைத்து ஏகாதிபத்திய–முதலாளித்துவ நாடுகள் இன்று எதிர்கொண்டு வருவது போன்று, அன்றைய இரஷ்யா கடும் ஒழுக்கநெறி நெருக்கடியினை எதிர்கொள்ளவில்லை.

இப்பின்னணியில், அப்போது ரஷ்யாவில் பல்வேறு பொருளாதார மற்றும் பிற கோரிக்கைகளை முன்வைத்த தொழிற்சாலை வேலை நிறுத்தங்கள் அலையலையாய் வெடித்தெழுந்தன. 1905ல் நடந்த புரட்சிக்கு முன்பு போல்ஷ்விக் கட்சியின் முயற்சியினால் அத்தகைய அனைத்து வேலை நிறுத்தங்களும் அரசியல் வேலை நிறுத்தங்களாக மாறின. புரட்சிகர எழுச்சியில் ராணுவப்படை மற்றும் கடற்படையும்கூட இணைந்துகொண்டன.

தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்கள் மத்தியிலும் சில பகுதிகளில் விவசாயிகள் மத்தியிலும் கூட அரசியல் அதிகாரக் கருவிகளான சோவியத்துக்கள் தன்னிச்சையாக வளர்ந்தன. புரட்சியை வெற்றிகரமாக்கிடுவதற்கான அரசியல் அதாவது அமைப்புரீதியிலான பலம் அந்நேரத்தில் போல்ஷ்விக்குகளுக்கு இருக்கவில்லை யெனினும், 1905ல் ஏற்பட்ட எழுச்சியில் போல்ஷ்விக்குகள் ஆற்றிய பாத்திரத்திரத்திலிருந்து அவர்கள்தான் பின்னர் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான சக்தி என்பது மிகத்தெளிவாகத் தெரியவந்தது. லெனின் அவர்கள் இந்த 1905 புரட்சியை வரவிருக்கும் நவம்பர் புரட்சிக்கான ஒத்திகைப் பயிற்சியெனக் குறிப்பிட்டதுடன் 1905ல் அத்தகைய புரட்சிக்கான முயற்சி இல்லாதிருக்குமானால், 1917ல் நவம்பர் புரட்சி ஒருபோதும் வெற்றி பெற்றிருக்க முடிந்திருக்காது என்றார்.

"போல்ஷ்விக்" என்ற ரஷ்ய சொல்லின் பொருள் பெரும்பான்மை என்பதாகும். அதே நேரம் "மென்ஷ்விக்" சிறுபான்மையைக் குறிக்கின்றது. ஆக, பிற சோசலிஸ்ட் சக்திகளை ஒப்பிடுகையில், போல்ஷ்விக் கட்சியானது பலமிக்கதாக இருந்தது. விடுதலைக்கு முன்பு நமது நாடு எப்படியிருந்ததோ கிட்டத்தட்ட அது போன்றே புரட்சிக்கு முந்தைய இரஷ்யாவாவும் இருந்தது. அந்நேரம் முதலாளித்துவம் இரஷ்யாவில் அதிகம் வளர்ச்சியுறவில்லை. உண்மையில், நமது விடுதலைப் போராட்ட கால கட்டத்தில் இந்தியாவில் முதலாளித்துவம் அடைந்திருந்த வளர்ச்சியை ஒப்பிடும்போது இரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி பலவீனமாகக் காணப்பட்டது.

இரஷ்யாவில் ஜார் பேரரசு, அதாவது ஜார் பிரபுக்களின் நிலப்பிரபுத்துவ ஆட்சியின் கீழான பண்ணையடிமை ஆட்சி இருந்தது. விவசாயத்தில் பெரும்பாலும் பண்ணையடிமை– நிலப்பிரபுத்துவ பிரபுக்களின் நிலப்பிரபுத்துவ ஆட்சிக்குட்பட்ட உற்பத்தி உறவுகளே இருந்தன. ஒருசில தொழிற்சாலைகளே நிறுவப்பட்டிருந்தன. அங்கு அத்தகைய நிலைமைதான் இருந்தது. அதே சமயத்தில், வெளிநாட்டு ஏகாதிபத்திய மூலதன மானது ஜார்–மன்னர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டு இரஷ்ய மண்ணில் நுழைந்திருந்தது. அதன் விளைவாக, அந்நேரத்தில் இரஷ்யாவானது பெருமளவில் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக் கட்டமாக இருந்தது.

பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி என்பதன் பொருள் சொத்து மீதான தனிநபர் சொத்துடைமை உரிமையை நிறுவிடுவதற்கான புரட்சி என்பதாகும். நிலப்பிரபுத்துவத்தில், கடவுளின் பிரதிநிதியாக ஏற்கப்பட்டவர் எனக் கருதப்பட்ட நிலப்பிரபு அல்லது முடிமன்னர் தான் சொத்தை உடைமைகாகக் கொண்டிருக்க முடியும்.

வணிக மூலதனமானது தொழில் மூலதனமாக மாறியபோது, அது தனிநபர் உடைமை, குடிசைத் தொழில்களுக்குப் பதிலாக பெரும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல் மற்றும் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாக சுதந்திரமாக வேலைசெய்திடும் பொருட்டு நிலங்களிலிருந்து பண்ணையடிமைகள் விடுவிக்கப்பட வேண்டும் எனும் கோஷங்களை எழுப்பியது.

பொருளாதாரக் கோணத்திலிருந்து பார்த்தால், இத்தகைய கோரிக்கைகள் அப்போது முற்போக்கானதாக இருந்தன. அதனடிப்படையில், தனிநபர்கள் அனைவருக்குமான சொத்தின் மீதான உரிமை ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக வெளிப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டமும்கூட தனிநபர் சொத்துடைமையை எழுத்துபூர்வமாக வழங்கியுள்ளது. இவ்வுரிமையானது பூர்ஷ்வாக்களால் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. முதலாளித்துவத்தில், சொத்துடைமை உரிமை ஒவ்வொரு தனிநபருக்கும் உண்டு. இவ்வுரிமை நிலப்பிரபுத்துவத்தில் வழங்கப்படவில்லை.

இவ்வுரிமையின் அடிப்படையில் தனிநபர் சுதந்திரம் என்ற கோட்பாடு, சிந்திக்கும் உரிமை, கருத்து வெளியிடும் உரிமை, பெண்களின் சுதந்திரம், போராடும் உரிமை, அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை மற்றும் நிலப்பிரபுத்துவ முடியாட்சி முறைக்குப் பதிலாக பூர்ஷ்வா பாராளுமன்றத்தை நிறுவிடும் உரிமை போன்றவை பரிணமித்தன. இந்த அனைத்துக் கோட்பாடுகளும் உரிமைகளும் தனிநபர் உடைமையின் அவசியத்தின் அடிப்படையில் வந்தவைகளாகும். இக்கண்ணோட்டத்தில் பார்க்கையில், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியானது அன்றைய வரலாற்றுக் கட்டத்தில் முற்போக்கானதாக இருந்தது.

பிரெஞ்சுப் புரட்சி, இங்கிலாந்தின் தொழிற் புரட்சி மற்றும் ஜெர்மனியில் நடந்த விவசாயிகளின் போர் யாவும் முற்போக்கான புரட்சிகளாக இருந்தன. சமத்துவம்–சகோதரத்துவம்–சுதந்திரம் என்ற கோஷங்கள்கூட இக்காலகட்டத்தில்தான் எழுப்பப்பட்டன. இதைப் போன்றே, குடியரசை நிறுவுதல், 'மக்களால், மக்களுக்காக, மக்களின்' அரசாங்கங்களை ஏற்படுத்துதல் எனும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. தனிநபர் சுதந்திரம் எனும் அந்த கோஷமே புதிய உணர்வினையும், ஒரு புதிய நியாய உணர்வையும் வழங்கியது. எனவே, அப்போது தனிநபர் சுதந்திரமானது முற்போக்கான தூண்டுதலைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

சுதந்திரப் போராட்டத்தின் எந்த ஒரு தலைவரும் தொண்டரும் அல்லது தியாகியும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளராக இருக்கவில்லை. அவர்களின் தத்துவார்த்த அடிப்படையானது பூர்ஷ்வா அர்த்தத்தில் தனிநபர் விடுதலையாகவே இருந்தது. ஏனெனில், நமது விடுதலை இயக்கமே குணாம்சத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் பூர்ஷ்வா ஜனநாயகத்தை நிறுவுவதற்கான ஒரு இயக்கமாகவும் இருந்தது.

நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்திட வேண்டியத் தேவை இருந்தும்கூட, நமது விடுதலை இயக்கத்தின் சமரசவாதத் தலைவர்கள் அக்கோஷத்தை எழுப்பவில்லை. எப்படியிருந்தாலும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும்கூட ஒரு பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியை அடைவதற்கான போராட்டமாகவே இருந்தது. அந்நிய ஆட்சியிலிருந்த நாட்டின் அடிமைச் சங்கிலியை உடைத்தெறிந்திட நமது விடுதலை இயக்கத்தைத் துவக்கிய தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் யாவரும் தனிநபர் விடுதலையை அடைந்திடுவதற்கான வேட்கையினால் தூண்டப்பட்டிருந்தனர்.

### ஒரு உண்மையான கம்யூனிஸ்டுக்கான செழுமைப்படுத்தப்பட்ட கோட்பாடு

நவம்பர் புரட்சிக்கு முன்பாக ரஷ்யாவில் பிப்ரவரி புரட்சி நடைபெற்றபோது, மக்களின் பிரதான கோரிக்கையானது தனிநபர் விடுதலையைப் பெறுவதற்காகவே இருந்தது. போல்ஷ்விக் கட்சியும் கூட தனிநபர் விடுதலை என்ற கோஷத்தையே எழுப்பியது. தோழர்கள் இதனை முறையாக மனதில் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 8ம் பக்கம்

## மாபெரும் லெனினும் நவம்பர் புரட்சியும்

# கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாட்டையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டையும் லெனின் வளர்த்தெடுத்தார்

7ம் பக்கத் தொடர்ச்சி

வங்க எழுத்தாளர் சரச்சந்திரரின் புகழ்பெற்ற பதேர்தாபி (பாதை வேண்டும்) என்ற நாவலில் அதில் வரும் பாத்திரங்களில் ஒன்றான அபூர்வா என்பவன் புரட்சிகர இயக்கத்திலிருக்கும் ஒரு விடுதலைப் போராளியான ராமதாஸ் தல்வார்க்கரிடம், "திருமணம் செய்தபின் ஏன் இந்த புரட்சிகர இயக்கத்தினுள் உங்களை ஈடுபடுத்திக் கொண்டீர்கள் எனக் கேட்கிறான். அதற்கு அவர், "பாபுஜி, திருமணம் என்பது ஒரு தர்மம். ஆனால், மாபெரும் தர்மம் என்பது நாட்டின் விடுதலைக்காகப் பணி செய்வது. மாபெரும் தர்மத்திற்கு முன்பாக அதைவிட சிறிதான தர்மம் அதற்குத் தடையாக இருக்குமெனில், நான் திருமணம் செய்திருக்க மாட்டேன்." என்று பதிலுரைக்கின்றார்.

இதன் பொருள் நாட்டின் நலனே முதன்மையானது என்பதாகும். தனிநபர் விடுதலையின் தேவை மற்றும் தனிநபர் குடும்பத்தின் தேவையைவிட விடுதலை இயக்கத்தின் தேவை முதன்மையானது. தனிநபர் நலன் என்பது புரட்சியின் நலனுக்கு கீழ்ப்பட்டதே என சோவியத் அரசியலமைப்புச் சட்டத்திலும்கூட எழுதப்பட்டிருக்கின்றது. இதனை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், இது பிரதானமாக பூர்ஷ்வா மனிதாபிமான மதிப்புகள் கோட்பாடாக இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார்.

இரஷ்யாவில் இந்த பூர்ஷ்வா மனிதாபிமான மதிப்புகளின் தாக்கம் நவம்பர் புரட்சியின்போதும் புரட்சிக்குப் பின்னரும் வெகுகாலம் இருந்தது என தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சுட்டிக்காண்பித்திருக்கின்றார். ஏகாதிபத்தியம்–நிலப்பிரபுத்துவத்துக்கெதிரான புரட்சியாக இருந்ததினால், சீனப்புரட்சியிலும்கூட அதன் தாக்கம் இருந்தது. தனிநபர் நலன் என்ற கோட்பாடு புரட்சியின் நலனுக்கு அடிபணிந்து நடப்பது என்றி ருப்பதால் அதன் தயாரிப்புக் காலகட்டத்தில் புரட்சியின் தேவையைப் பூர்த்திசெய்திடுவதில், ஆட்சியைக் கைப்பற்றிட கிளர்ச்சி செய்த போதும் பின்னர் சோசலிசக் கட்டுமான காலகட்டம் வரையிலும் அதன் தாக்கம் இருந்தது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சோசலிசப் பொருளாதாரத்தின் பிரம்மாண்டமான முன்னேற்றம் மற்றும் நிலைத்தன்மையின் பிந்தைய கட்டத்தில் இதே கோட்பாடு 'சோசலிசத் தனிநபர்வாதம்' எனும் புதிய நிகழ்வை உருவாக்கி சோசலிச அமைப்பை ஆபத்திற்குள்ளாக்கியது. உயர்ந்த கம்யூனிச மதிப்புகள் என்பது தனிச்சொத்தை ஒழிப்பது மட்டுமின்றி 'தனிச்சொத்து மனப்பான்மை'யிலிருந்து விடுவித்துக் கொண்டு அதன் மூலம் வர்க்கம், புரட்சி மற்றும் கட்சியின் நலனுடன் ஒருவர் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும் என வேண்டுகிறது. இப்போதனையை இடையிடையே நினைவுபடுத்தினாலும் அது விவாதிக்கும் பொருளுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

### நவம்பர் புரட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட உத்திகள்

ஏற்கனவே விவாதித்த விஷயத்திற்கு நான் மீண்டும் வருகிறேன். பிப்ரவரி புரட்சியில் உழைக்கும் வர்க்கத்தின் முக்கியமான பாத்திரம் இருந்திட்ட போதிலும், அது அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. ஏனெனில் மென்ஷ்விக்குகளின் துரோகத்தினால் அதிகாரம் பூர்ஷ்வாக்களால் அபகரிக்கப்பட்டது. முன்னதாக இரண்டு காரணங்களால் மென்ஷ்விக்குகள் பெரும்பான்மையான சோவியத்துக்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

முதலாவதாக, போல்ஷ்விக்குகள் ஜாரின் படையை எதிர்த்து தெருக்களில் போரிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் மென்ஷ்விக்குகள் அப்படிப் போராடவில்லை. எனவே போல்ஷ்விக்குகள் பல்வேறு சோவியத்துக்களில் அந்த அளவிற்கு முயற்சி எடுக்க முடியவில்லை. பின்னர்தான் அத்தகைய சோவியத்துக்கள் எல்லா இடங்களிலும் தன்னிச்சையாக உருவானது. அந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொண்டு மென்ஷ்விக்குகள் பெரும்பான்மையான சோவியத்துக்களில் தங்களின் கட்டுப் பாட்டை நிறுவிக்கொண்டனர்.

அத்துடன், லெனின் அவர்கள் மற்றொரு அம்சத்தில் கவனத்தை ஈர்த்தார். நீண்ட நாட்களாக தொழிற்சாலைகளில் வேலை பார்த்த தொழிலாளர்கள் தங்களுக்குள் சிறிதளவு பாட்டாளி வர்க்க உணர்வை வளர்த்துக்கொண்டிருந்தனர் என்பதை அவர் சுட்டிக்காண்பித்தார். ஆனால், அவர்களில் பெரும்பான்மையினர் ஜார் அரசாங்கத்தினால் போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர். எனவே அவர்கள் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

தொழிற்சாலைத் தொழிலாளர்களாக தங்கள் பகுதிகளில் பணியமர்த்தப்பட்டிருந்தவர்கள் யாவரும் கிராமங்களிலிருந்து சமீபத்தில் புலம் பெயர்ந்து வந்தவர்கள் ஆவர். இதன் அர்த்தம் அவர்கள் முன்பு விவசாயிகளாயிருந்து இப்போது தொழிலாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர் என்பதாகும். விவசாயிகள் குட்டி முதலாளித்துவ மனநிலையைக் கொண்டிருந்ததால் இத்தகைய புதிய தொழிலாளர்களும்கூட அந்த செல்வாக்கைப் பெற்றிருந்தனர். இவர்கள் முன்பு தொழிலாளர்களாயிருந்து பின்னர் போருக்கு அனுப்பப்பட்ட பாட்டாளி வர்க்க வகையைச் சார்ந்தவர்கள் அல்லர். கிராமங்களிலிருந்து வந்த இத்தகைய புதிய தொழிலாளர்கள்தான் சோவியத்துக்களில் பெரும்பான்மையினராக இருந்தனர்.

இந்த இரண்டு காரணங்களினால், போல்ஷ்விக்குகளுக்கு துவக்கத்தில் சோவியத்துக்களில் பெரும்பான்மை இல்லை. ஆதலால், சோவியத்துக்களில் மென்ஷ்விக்குகள் பெரும்பான்மையினராக இருந்துகொண்டு பிப்ரவரியில் அதிகாரத்தை பூர்ஷ்வாக்களிடம் ஒப்படைத்தனர். அப்படியிருந்தும்கூட, லெனின் செயல்திறனுடன் மார்க்சிசத்தைப் பிரயோகித்தார். நவம்பர் புரட்சியின் வெற்றிக்குப் பின்னால் இருந்த முக்கியக் காரணங்களைக் சுட்டிக்காண்பிக்கையில், நவம்பர் புரட்சி பெற்ற அனுபவம் பிற நாடுகளின் புரட்சிக்குக் கிடைக்கவில்லை என அவரே கூறியிருக்கின்றார். பல்வேறு நாடுகளில் புரட்சியின் சூழ்நிலைகளுக்கிடையே வேறுபாடு எப்போதுமே இருக்கும்.

முதலாவதாக இரஷ்யாவில், முதல் உலகப் போர் நடந்துகொண்டிருக்கையில் ஏகாதிபத்தியவாதிகள் இரண்டு போரிட்டுக்கொண்டிருக்கும் குழுக்களாகப் பிளவுபட்டுக்கிடந்தனர். ஆதலால், லெனின் விளக்கியிருப்பதுபோல், அவர்கள் ஒன்றுபட்டு இரஷ்யப் புரட்சியை எதிர்த்திட முடியவில்லை. இது ஒரு சந்தர்ப்பமாக இருந்தது. இரண்டாவதாக, ஜார் மன்னர் போரில் தோல்வியைச் சந்தித்துக்கொண்டிருந்தார். அவர்களின் எதிரி ஜெர்மனி ஏகாதிபத்தியமாக இருந்ததால் ஜார் மன்னர் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஏகாதிபத்தியத்துடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தார். ஜாரின் தோல்வியுடன் கூடவே, போரினால் இரஷ்யா முழுமையும் பஞ்சத்தின் பிடியில் இருந்தது. இத்தகைய சூழ்நிலையில் இரஷ்ய மக்கள் அமைதி வேண்டும், போர் வேண்டாம் என்று கோரிக்கொண்டிருந்தனர்.

ஆதலால் இரஷ்யப் புரட்சியின் முழக்கமானது, எங்களுக்கு உணவு வேண்டும், எங்களுக்கு அமைதி வேண்டும், எங்களுக்கு விடுதலை வேண்டும் மற்றும் பாடுபவர்களுக்கு நிலம் வேண்டும் என்றே இருந்தது. தனிநபர் சுதந்திரம் மற்றும் உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற கோஷங்களே பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் கோஷங்கள் ஆகும். இத்தகைய கோஷங்களின் அடிப்படையில் பிப்ரவரி புரட்சியானது வெற்றிகண்டது.

தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சாமானிய மக்கள்தான் புரட்சிக்காகப் போரிட்டனர். ஆனால் மென்ஷ்விக்குகளின் துரோகத்தினால், பூர்ஷ்வாக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர்.

அக்கட்டத்தில், ஆட்சிக்கு வந்த பின்னரும் பூர்ஷ்வாக்கள் போரைக் கைவிடாமல் தொடர்ந்து கொண்டிருந்தனர் என லெனின் சுட்டிக்காண்பித்தார். பூர்ஷ்வா ஆட்சியாளர்கள் அமைதி ஏற்படுவதை விரும்பவில்லை. அரசானது பெரும் உணவுப் பதுக்கல்காரர்களிடமிருந்து உணவுப் பொருட்களை பறிமுதல் செய்யவில்லையென்றும் அவைகளை பசியால் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு வினியோகிக்கவுமில்லை என்பதையும் சுட்டிக்காண்பித்தார். பூர்ஷ்வா அரசாங்கமானது ஜாருடனும் நிலப்பிரபுத்துத்துடனும் சமரசம் செய்துகொண்டிருந்தது. ஆதலால் அது பாடுபடுவர்களுக்குக்கூட நிலத்தை வினியோகிக்கவில்லை. தெளிவாகவே பூர்ஷ்வா ஆட்சியாளர்கள் மக்களுக்குத் துரோகம் இழைத்துக் கொண்டிருந்தனர்.

இவையனைத்தையும் சுட்டிக் காட்டியதுடன், தீவிர சித்தாந்தப் போராட்டத்தைத் தொடுத்து, மென்ஷ்விக்குகளைத் தோற்கடித்து சோவியத்துக்களில் போல்ஷ்விக்குகள் பெரும்பான்மையைப் பெற்றனர். பிப்ரவரி புரட்சிக்குப் பின்னரும்கூட, வெகுஜனங்கள் மத்தியில் புரட்சிக்கான ஆர்வம் மிகவும் உயிரோட்டமானதாக இருந்தது என்பதை லெனினும் கண்டார். துப்பாக்கியுடன் புரட்சியில் இணைந்தவர்கள் போர்க்களத்திலிருந்து இன்னும் திரும்பாமலிருந்தனர். ஆயுதங்கள் அவர்கள் கையில் தான் இருந்தது. அவர்களும் எதிர்ப்பு மனப்பாங்கைக் கொண்டிருந்தனர். எனவே அதிகாரத்தைக் கைப்பற்ற ஆயுதக் கிளர்ச்சி செய்வதற்கான சரியான தருணம் என்பதை லெனின் உணர்ந்துகொண்டார்.

பூர்ஷ்வா கெரென்ஸ்கி அரசாங்கமும், மென்ஷ்விக்குகளும் சோசலிஸ்டுகளும் அவர்களை வஞ்சித்து விட்டனர் என்றும் அவர்களின் நலன்களுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும் சோவியத்துக்களை ஏற்றுக்கொள்ள வைத்தார். ஆதலால், சோசலிசப் புரட்சியை கொண்டுவர வேண்டும். அரசு அதிகாரம் பூர்ஷ்வாக்கள் கைகளில் இருந்ததினால் அவரது அறைகூவல் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியாக இருந்தது.

"இரஷ்யாவில் அரசு அதிகாரமானது ஒரு புதிய வர்க்கமான பூர்ஷ்வாக்கள் மற்றும் பூர்ஷ்வாக்களாக மாறிய நிலவுடமையாளர்கள் கைகளுக்குச் சென்றுவிட்டதனால் இந்த அளவிற்கு இரஷ்யாவில் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியானது முற்றுப்பெற்றுவிட்டது" என லெனின் விளக்கினார். (ஏப்ரல் ஆய்வறிக்கை)

புரட்சியின் கட்டமானது எந்த வர்க்கம் எந்த வர்க்கத்தை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிய வேண்டும் என்ற கேள்வியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது என்பதையும் அவர் விரித்துரைத்தார். பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர் அரசு அதிகாரத்தை பூர்ஷ்வாக்கள் கைப்பற்றியதால், அதிகாரத்திலிருந்து தூக்கியெறியும் புரட்சியானது முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியாக இருக்கும்.

ஆனால், இந்த சோசலிசப் புரட்சியானது முன்னேறிய முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளில் நடைபெறும் புரட்சியைப் போன்று இருக்காது. பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி பூர்த்தி செய்யாத கடமைகளை இத்தகைய சோசலிசப் புரட்சிதான் நிறைவேற்றிட வேண்டும். இதன் காரணமாக, புரட்சிக்குப் பிந்தைய இரஷ்யாவில், பஞ்சத்தைக் கட்டுக்குள் கொண்டுவர உணவுப்பொருள் வியாபாரிகள் பதுக்கி வைத்திருந்த உணவு தானியத்தைப் பறிமுதல் செய்திடவும் அவற்றை பசியிலிருக்கும் மக்களிடம் வினியோகிக்கவும் வணிகத்தைக் கட்டுப்படுத்தவும் லெனின் அவர்கள் கம்யூனிசப் போர்க் கொள்கையை வகுத்தெடுத்தார்.

இக்கட்டத்தை நிறைவேற்றிய பின்னர், அவர் புதிய பொருளாதாரக் கொள்கையை (NEP) அறிமுகப்படுத்தினார். இக்கொள்கையின்படி, தனி முதலாளிகள் சோசலிச அரசின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற் சாலைகளை நிறுவிக்கொள்ள சில வாய்ப்புகளை அவர் தந்தார். அப்போதைய சூழ்நிலை இதுதான். ட்ராட்ஸ்கியும் பிறரும் கம்யூனிசப் போர்க்கொள்கை களையும் புதிய பொருளாதாரக் கொள்கையையும் எதிர்த்தனர். ட்ராட்ஸ்கி இரஷ்யா போன்ற ஒரு பின்தங்கிய நாட்டில் புரட்சியை நடத்திட முடியாது என வாதிட்டு சோசலிசப் புரட்சியையும்கூட எதிர்த்தார்.

புரட்சியின் முதற்கட்டத்தில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஒற்றுமை இருக்கும். பிந்தைய கட்டத்தில் தொழிலாளகள் மற்றும் ஏழை விவசாயிகளின் ஒற்றுமையாக இருக்கும். ட்ராட்ஸ்கி தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கிடையே ஒற்றுமையானது இருக்க முடியாது என்றார். இது போன்ற பல்வேறு கேள்விகளில் ட்ராட்ஸ்கி, காமனேவ் மற்றும் ஜினோவிவ் ஆகியோருடன் லெனினுக்கு வேறுபாடு இருந்தது. இத்தகைய ஒவ்வொரு சர்ச்சையிலும் ஸ்டாலின் அவர்கள் லெனினுக்கு ஆதரவாக நின்று ஓர் முக்கியப் பாத்திரத்தை வகித்தார்.

நவம்பர் புரட்சியின் வெற்றிக்கு மற்றொரு காரணியும் லெனினால் வைக்கப்பட்டது. இரஷ்யா ஒரு பரந்த நாடு என்பதையும் தகவல் தொடர்பு அமைப்பு மிகவும் பலவீனம் என்பதையும் சுட்டிக்காண்பித்தார். எனவே, நீண்ட காலம் வரையில் உள்நாட்டுப் போரை தொடர முடிந்தது.

### மார்க்சிசத்தின் சாராம்சத்தை லெனின் உட்கிரகித்துக்கொண்டார்

லெனின் மார்க்சிசத்தை சரியாக ஈர்த்துக் கொண்டார். சர்வதேசிய சூழ்நிலையையும் இரஷ்ய

தொடர்ச்சி 9ம் பக்கம்

## மாபெரும் லெனினும் நவம்பர் புரட்சியும்

# திருத்தல்வாதத்தை விரித்துரைத்து அதன் பெரும் ஆபத்து குறித்து லெனின் எச்சரித்தார்

8ம் பக்கத் தொடர்ச்சி

சூழ்நிலையையும் ஆய்வு செய்வதில் மார்க்சிசத்தை அவரால் சரியாகப் பிரயோகித்திட முடிந்ததால், இந்த செயல்முறைப் போக்கில் அவரால் மார்க்சிசத்தை மேலும் வளர்த்திடவும் செழுமைப் படுத்திடவும் முடிந்தது. பூர்ஷ்வா கோட்பாடுகளை எதிர்த்து போராடியதன் மூலம் இரஷ்யாவில் ஏன் மார்க்சிசம் தேவைப்பட்டது என்பதை அவரால் நிலைநாட்ட முடிந்தது.

அதே சமயம், பிளக்கனோவ், ட்ராட்ஸ்கி மற்றும் பிறரது தவறான கோட்பாடு களை எதிர்த்து நின்றதன் மூலம் மார்க்சிசத்தின் சரியான புரிதலை அவர் வழங்கியுள்ளார். அவரது பாத்திரத்தையும் தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையெனில் பின்னர் அரை மணி நேரமாக நான் இன்று விவாதித்தவைகளைப் புரிந்து கொண்டு கையாள்வது அத்தனை சுலபமில்லை.

லெனின் ஐரோப்பா மற்றும் மாபெரும் இரஷ்யாவின் இரண்டாம் அகிலத் தலைவர்களின் மாணவராகத் துவங்கியதால், மார்க்சிசத்தின் சாராம்சத்தை உள்வாங்கிக் கொண்டதனால் அவர்களின் விலகல்களை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எனவே, தத்துவார்த்த ரீதியில் அவர்களை எதிர்த்து அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டிட வேண்டியிருந்தது. அவ்வாறு செய்ததின் போக்கில், மார்க்சிசத்தின் சரியான புரட்சிகரப் புரிதலையும், மாறிய சர்வதேசிய சூழ்நிலையில் ஒருவர் அத்தகைய புரிதலை எவ்வாறு வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் இரஷ்யாவின் பருண்மையான சூழ்நிலையில் அதனை எவ்வாறு பிரயோகித்திட வேண்டும் என்பதையும் அவர் வழங்கினார்.

நாட்டின் நாடித்துடிப்பை உணர்ந்துகொள்வ தற்கும் உழைக்கும் வர்க்கத்தின் அதனுடன் பெரும் பான்மை மக்களின் மனநிலையைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் எல்லாவற்றிற்கும் மேலாக பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர், சோசலிசப் புரட்சியை நிறைவேற்றிட இதுதான் சரியான நேரம் என்பதைப் உணர்ந்திடவும் மார்க்சிசத்தின் எத்தகைய உயர்ந்த புரிதல் தேவைப்பட்டிருக்கின்றது.

நவம்பர் புரட்சிக்கான அறைகூவல் விடுத்த நேரத்தில் சில பேர், மார்க்ஸ் கூற்றுப்படி புரட்சி யானது முதலில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில்தான் வெடிக்கும். ஆனால் இரஷ்யாவில் முதலாளித்துவம் வளர்ச்சியுறவில்லை. பின்னர் இங்கு புரட்சியை எங்ஙனம் நிறைவேற்றிட முடியும்? என்று வாதிட்டார்கள்.

அவர்கள் மார்க்ஸ்ஸின் படைப்புக்களை மேதாவித்தனமாகப் படித்திருக்கின்றனர் என்றும் ஆனால் அவர்கள் மார்க்சிசப் பகுப்பாய்வு முறையியலைப் புரிந்து கொள்ளவில்லை எனவும் அவர் அவர்களுக்குப் பதிலளித்தார். ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்தங்கிய நாடுகளில் முதலாளித் துவத்தின் சமமற்ற வளர்ச்சியினால் முன்பு பார்த்ததுபோல் முதலாளித்துவம் வளர்ச்சியுற முடியாது. மேலும் பெரும் ஏகாதிபத்திய சக்திகள் பின்தங்கிய அதாவது வளர்ச்சியடையாத நாடுகளில் முதலாளித்துவம் செழித்து வளர அனுமதிக்காது.

எனவே, இச்சகாப்தத்தில் தொழிற் புரட்சியை பூர்ஷ்வாக்களின் தலைமையின்கீழ் நடத்திட முடிய வில்லை. அது உழைக்கும் வர்க்கத்தின் தலைமை யின்கீழ் மட்டுமே நடத்திட முடியும். தொழிற்புரட்சி யானது அப்போதுதான் முழுமையான வெற்றியை அடைய முடியும். கருத்தியல் களத்தில் இத்தகைய பல போராட்டங்களை லெனின் நடத்திட வேண்டியிருந்தது. நவம்பர் புரட்சியின் முக்கியத் துவத்தை புரிந்துகொள்ள வேண்டுமாயின், லெனினது இத்தகைய தன்னிகரில்லா பாத்திரத் தையும் மதிப்பிற்கரிய பங்களிப்புக்களையும் ஒருவர் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

### மார்க்சிசப் புரிதல் உயிரோட்டமுள்ளதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இருக்கவேண்டும்

மார்க்சிசத்தின் சரியான புரிதலையும் பிரயோகத் தையும் லெனின் அவர்களால் எவ்வாறு வெற்றி கரமாக வழங்கிட முடிந்தது. தனிநபர் ஆற்றும் பாத்திரம் பற்றிய கேள்வியானது இங்குதான் எழுகிறது. இதனை முறையாக உணர்ந்திடுவது தேவைப்படுகிறது.

லெனின் லெனினாக, மேதையாகப் பிறந்திட வில்லை. ஸ்டாலின், மாவோ அல்லது சிப்தாஸ் கோஷ் ஆகிய எவரும் அப்படிப் பிறக்கவில்லை. எந்த மாபெரும் மனிதரும் அப்படிப் பிறக்கவில்லை. எக்காலத்திலும் ஒருவர் மேதையாகப் பிறந்திட முடியாது. மேதைமை என்பதுகூட ஒரு செயல் முறைப்போக்கின் உற்பத்திப்பொருளேயாகும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் தோழர் சுபோத் பேனர்ஜி அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகையில், இந்த அம்சத்தை விரிவாக விளக்கியுள்ளார்.

எவரொருவரும் மேதையாகவோ அல்லது திறமை யுடையவராகவோ பிறப்பதில்லை. ஒருவர் எந்த அளவிற்கு அவரது திறமை, திறன் அதாவது தேர்ச்சியை அடையமுடியும் என்பது ஒருவர் எவ்வளவு சிறப்பாக சரியான புரட்சிகர அதாவது முற்போக்கான சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் தழுவிய போராட்டத்தை நடத்துகிறார் என்பதைப் பொறுத்துத் தான் இருக்கிறது. இதில் அவரது ஆசான்கள் தவறிய போது, உரிய முறையில் போராட்டம் நடத்துவதில் மற்றும் புரட்சியை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டார். உலகில் எல்லோருக்கும் இயலாத ஒன்றாக இருந்தது அவரால் அடைந்திட முடிந்தது. அவர் சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றார்.

இத்தகைய கடமையே அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை, உண்மையில் மிகவும் கடுமையாக இருந்தது. மார்க்சிய நூல்களை வெறுமனே படிப்பது ஒருபோதும் போதாது. அதனால்தான் மார்க்சிசம் ஒரு ஆக்கபூர்வ அறிவியல் எனக் கூறப்படுகிறது. அறிஞர்களும்கூட பல நூல்களைப் படித்திருக் கின்றனர். ஆனால், ஒருவர் படித்தவற்றை மனப் பாடம் செய்வதால் மட்டுமே அத்தகைய ஆக்கத்தைப் பெற முடியாது.

மார்க்சிசக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் நீங்கள் ஆய்வு செய்கின்றீர்களா? முரண்பாடுகளை உரிய முறையில் கணக்கில் கொள்கின்றீர்களா? சமுதாயத்திலிருக்கும் நோயை நீங்கள் ஒரு மருத்துவரைப்போல் கண்டறிகின்றீர்களா? வர்க்க முரண்பாடுகளை உங்களால் அடையாளம் காண முடிகின்றதா?

பூர்ஷ்வாக்கள் எவ்வாறு அதன் சித்தாந்தம் மற்றும் கலாச்சாரத்தின் மூலம் தாக்குதல் தொடுக்கின்றனர்? இத்தகையத் தாக்குதல்களை முறியடித்திட பாட்டாளி வர்க்கம் எவ்வாறு போராட்டம் நடத்திட வேண்டும்?

ஒரு புதிய சூழ்நிலையில் மார்க்சிச அறிவியலை எவ்வாறு ஆக்கபூர்வமாகப் பிரயோகித்திட வேண்டும்? பருப்பொருளின் உள்ளிருக்கும் பல்வேறு முரண்பாடுகளின் தன்மைகள் யாவை? இத்தகைய முரண்பாடுகள் ஒரு நாட்டில் எவ்வாறு காணப்படுகின்றன.

கட்சியிலிருக்கும் தோழர்களின் உணர்வுமட்டத் தரம் என்பது எது? முரண்பாடுகள் தோழர்களின் சிந்தனைக் களத்தில் எவ்வாறு வேலைசெய்கின்றது? பூர்ஷ்வா மற்றும் பாட்டாளி வர்க்கம் ஆகிய இரண்டுக்குமிடையேயான முரண்பாட்டில் தோழர்கள் எவ்வாறு ஊசலாடிக்கொண்டிருக் கின்றனர்? ஒரு தோழருக்கு எவ்வாறு உதவி செய்வது? ஒவ்வொரு கணத்திலும் முரண்பாடுகள் எவ்வாறு தோன்றுகின்றன?

உள் மற்றும் வெளிமுரண்பாடுகள் என்பன யாவை? அவற்றுள் பிரதான முரண்பாடு என்பது எது? அந்த முரண் பாட்டின் பிரதான அம்சம் என்பது எது? காலப்போக்கில் இத்தகைய முரண் பாடுகள் எவ்வாறு மாறிக்கொண்டிருக்கின்றன?

மார்க்சிசத்தின் ஆக்கபூர்வ உயிரோட்டமான பிரயோகத்திற்கு இத்தகைய அனைத்து அம்சங் களையும் சரியாகக் கண்டுகொண்டு அவற்றைப் புரிந்துகொள்வது முன்தேவையாக இருக்கின்றது. எனவே மார்க்சியப் புரிதலானது உயிரோட்ட மானதாக இருக்க வேண்டும். அதற்கு மார்க்சிசத்தை வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டும்.

ஒருவர் எந்த அளவிற்கு மார்க்சிசத்தைப் புரிந்துகொண்டிருக்கின்றாரோ அந்த அளவிற்கு வாழ்க்கையில் அதனைப் பிரயோகிக்க வேண்டும். எந்த அளவிற்கு அதனை ஒருவர் வாழ்க்கையில் பிரயோகிக்கின்றாரோ அந்த அளவிற்கு அவர் உயர்ந்த கலாச்சாரத்தை அடைகின்றார். கலாச்சாரம் எந்த அளவிற்கு அடையப்பெற முடிகிறதோ அந்த அளவிற்கு மார்க்சிசப் புரிதல் என்பது உயர்ந்ததாக இருக்கும். இப்படித்தான் ஒருவர் முன்னேறிச்சென்றிட வேண்டும்.

எந்நேரத்தில் எக்கோரிக்கையை எழுப்ப வேண்டும், எந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும், மக்கள் எதிர்வினையாற்றும் வகையில் போராட்டத்திற்கு எந்த அறைகூவலை விடுத்திட வேண்டும் என்ற அனைத்தையும் கற்றுணர்வது என்பதன் பொருள் பல்வேறு முரண்பாடுகளையும் அவற்றின் தன்மைகளையும் புரிந்துகொள்வதாகும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இதன் பொருள் ஒரு குறிப்பிட்ட நேரத்தின் பருண்மையான முரண்பாடுகளை பருண்மையாகப் புரிந்துகொள்வது என்பதாகும். மக்கள் உணவு, அமைதி, நிலம் மற்றும் விடுதலையை வேண்டி நின்றதை பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர் லெனின் எந்த வழியில் புரிந்து கொண்டாரோ அதே வழியில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆனால், பூர்ஷ்வாக்கள் மக்களுக்குத் துரோகமிழைத்துக் கொண்டிருந்தனர். மக்கள் வேண்டி நின்ற எதனையும் அவர்களால் வழங்கிடவோ தந்திடவோ முடியவில்லை. மென்ஷ் விக்குகளும் மக்களுக்குத் துரோகமிழைத்தனர்.

அந்நேரத்தில், கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் சோவியத்துக்கள் நிறுவப்பட்டுவிட்டன. லெனினும் அவரது உற்ற தோழர்களும் இவற்றை யெல்லாம் சோவியத்துக்களிடம் விவரமாகக் கூறிடவேண்டியிருந்தது. இச்செயல்முறைப் போக்கில் சோவியத்துக்களில் முன்பு சிறுபான்மை யாக இருந்த போல்ஷ்விக்குகள் பெரும்பன்மையைப் பெற்றுவிட்டனர். பின்னர் லெனின் அவர்கள் ‘அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே’ என்ற முழக்கத்தை முன்வைத்தார். பூர்ஷ்வாக்கள் தங்களின் ஒட்டு மொத்தப் படைக்கலன்களையும் கொண்டு தாக்குதல் தொடுத்தனர். ஆனால், லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியின் அறைகூவலின்படி, உழைக்கும் வர்க்கம் எழுச்சியுற்று பூர்ஷ்வாக்களைத் தோற்கடித்தது. நவம்பர் புரட்சியானது வெற்றியடைந்தது.

### சோசலிசத்தினுள்ளே அதற்கான ஆபத்து இருந்ததை லெனின் எச்சரித்தார்

1917ஆம் வருடம் நவம்பர் மாதம் 17ஆம் நாள் நவம்பர் புரட்சியானது நிறைவேறியது. அதற்குப் பின்னர் சில நாட்களிலேயே லெனின் அவர்கள் கடும் நோய்வாய்ப்பட்டு இறுதியாக 1924ஆம் வருடம் ஜனவரி மாதம் 21ஆம் நாள் 53 வயதிலேயே உயிர் நீத்தார்.

ஆனால் இக்குறுகிய காலத்திலேயே, யதார்த்த நிலைமையைக் கண்டுகொண்டு சோசலிசம் எதிர் கொள்ள வாய்ப்பிருக்கும் நிகழக்கூடிய ஆபத்து குறித்து எச்சரித்தார். பூர்ஷ்வாக்கள் தூக்கியெறியப் பட்ட பின்னர் (அதாவது புரட்சிக்குப் பின்பு) அவர்களின் எதிர்ப்பானது பத்து மடங்கு அதிகரித் துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். பூர்ஷ்வாக் களின் பலம் (அது ஒரு நாட்டினதாக இருப்பினும்) ஏகாதிபத்திய–முதலாளித்துவத்துடனான அதன் சர்வதேசத் தொடர்புகளின் பலத்திலும் ஆயுளிலும் இருப்பதுமட்டுமல்லாது, சிறு உற்பத்தியின் பலத்திலும் மற்றும் நீடித்த பழக்கவழக்கத்தின் சக்தியினாலும்கூட (பூர்ஷ்வா மற்றும் நிலப்பிரபுத் துவத்தின்) இருந்துகொண்டிருக்கின்றது.

உலகில் அந்நேரம் சிறு உற்பத்தியானது மிகவும் பரந்து பட்டதாக இருந்துகொண்டு சிறு உற்பத்தி யானது முதலாளித்துவத்தையும் பூர்ஷ்வாக்களையும் தொடர்ச்சியாக, தினமும், ஒவ்வொரு மணித் துளியிலும், தன்னிச்சையாக மற்றும் மிகப்பெரு மளவில் தோற்றுவித்தது. எனவே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தூக்கியெறியப்பட்ட பூர்ஷ்வாக்களான, மிகவும் சக்திவாய்ந்த பகைவனுக் கெதிராக புதிய வர்க்கத்தினால் (பாட்டாளி வர்க்கம்) தொடுக்கப்பட வேண்டிய மிகவும் தீர்மானகரமான மற்றும் மிகவும் ஈவிரக்கமற்ற போராக இருந்தது என்றார். மற்றொரு இடத்தில், லட்சக்கணக்கான பல லட்சக்கணக்கானவர்களின் நெடுநாளைய பழக்க வழக்கத்தின் சக்தியென்பது ஒரு மிக பயங்கர சக்தியாகும் எனச்சுட்டிக்காட்டினார்.

லெனினுக்குப் பின்பு, அவரது மதிப்புமிக்க தொடர்ச்சியாளரான ஸ்டாலின், மாசேதுங் மற்றும் சிப்தாஸ் கோஷ் ஆகியோர் அவரது போதனை களினடிப்படையில், ஏன், எவ்வாறு சோசலிசமானது எதிர்ப்புரட்சியானால் ஆபத்திற்குள்ளாகும் என்பதையும் அத்தகைய ஆபத்திற்கான காரணங்களை முறையாக முறியடிக்காவிட்டால், எதிர்ப்புரட்சியானது வெற்றியடைந்து சோசலிசத்தைச் சிதைத்துவிடும் என்பதையும் பல்வேறு கோணங்களிலிருந்து காண்பித்தார்கள் ■

# ரிசர்வ் வங்கியின் ஆண்டறிக்கை பணமதிப்பு நீக்கத்தின் படுதோல்வியை அம்பலப்படுகிறது, இக்கொடிய பொருளாதாரத் தாக்குதல்களை மக்கள் ஒன்றுபட்டு முறியடித்திட வேண்டும் – எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவல்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஆகஸ்ட் 31, 2017 அன்று விடுத்துள்ள அறிக்கை:*

கருப்புப்பணத்தை மீட்டெடுக்கின்றோம் மற்றும் கள்ள நோட்டுக்கள் முறையைத் தூய்மைப்படுத்து கின்றோம் என்று பாஜக அரசாங்கம் தான் முன்னெடுத்த விநோதமான நடவடிக்கைக்கு ஆதரவாக முன்வைத்த நியாயப்படுத்துதல் என்பது உண்மையில் பொய்யானது என்பதையும் சாமானிய மக்களைப் பலிகடாவாக்கி மிகப்பெரும் ஏகபோகங்களின் நலன்களுக்குச் சேவை புரிந்திடும் மறைமுகத் திட்டத்தை செயல்படுத்திடு வதற்கே என்பதையும் ரிசர்வ் வங்கியின் சமீபத்திய ஆண்டறிக்கை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

பதுக்கி வைக்கப்படிருந்த 98 சதவீத ரூபாய் நோட்டுக்கள் வங்கி அமைப்பிற்குள் வந்தது என்பதும் அதில் டெப்பாசிட் செய்யயப்பட்ட பணத்தில் வெறும் 0.0013 சதவீதம் கள்ள நோட்டுக்களாக இருந்தது என்பதும் அரசாங்க மானது எவ்வாறு நாட்டு மக்களை, குறிப்பாக ஒன்றுமில்லாதவர்களையும் அடித்தட்டு மக்களையும் பணயம் வைத்து, ஏற்கனவே பாதித்திருக்கும் அவர்களின் பொருளாதார வாழ்வை மேலும் சீரழித்து, பல அப்பாவி உயிர்களைப் பலிவாங்கி, தங்களின் வருமானத்திற்கு முற்றிலும் ரொக்கத்தையே சார்ந்திருக்கும் ஏழை விவசாயிகள், தினக்கூலிகள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள் சாதாரண கடைக்காரர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் வாழ்க்கையைப் பறித்துவிட்டது என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

ரொக்கப்பணத்தை தடைசெய்யும் நடவடிக்கை யின் பின்னாலிருக்கும் கொடிய சதித்திட்டத்தை வெளிப்படுத்தி கடந்த நவம்பர் மாதம் எமது கட்சி, முதலாளித்துவமானது இன்று ஊழலில் திளைத்திருப்பது மட்டுமின்றி முற்றிலும் மனிதாபி மானமற்றுப் போய், மக்களின் நிலை, துயரங்கள் மற்றும் அவர்களின் கண்ணீரைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் அதன் ஒரே நோக்கமானது மக்களை ஏமாற்றுவதும், அவர்களில் பையிலிருக்கும் கடைசிப் பணத்தையும் பிடுங்கிக்கொண்டு, அவர்களின் பெருகிவரும் துன்பம் மற்றும் வறுமையில் ஏகபோக தொழில் அதிபர்கள் செழித்து வளர்வதற்கு வழிவகை செய்துள்ளது எனத் திட்டவட்டமாக விளக்கியிருந்தோம். எமது ஆய்வை உண்மைகள் உறுதிப்படுத்துகின்றன.

அரசாங்கத்தின் இனிப்பான வார்த்தைகளில் மயங்கிவிடாமல் உடனடியான ஒன்றுபட்ட அமைப்பு ரீதியிலான உணர்வுபூர்வ போராட்டத்தின் அழுத்தத்தின் மூலம் இத்தகைய கொடிய பொருளாதாரத் தாக்குதல்களை முறியடித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம் ■

# பிரபல பத்திரிகையாளர் கௌரி லங்கேஷின் ஈவிரக்கமற்ற கொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கவும் வகுப்புவாதக் கொலைகளுக்கு எதிராக மக்கள் போராடவும் – எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவல்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் செப்டம்பர் 06, 2017 அன்று விடுத்துள்ள அறிக்கை:*

பழம்பெரும் பிரபல பத்திரிகையாளரும் நூலாசிரியருமான கௌரி லங்கேஷ் அவர்கள் பெங்களூரில் அவரது இல்லத்தில் நேற்று ஈவிரக்கமற்ற முறையில் கொலைசெய்யப்பட்டது அறிந்து நாங்கள் அதிர்ச்சியடைந்திருக்கின்றோம்.

கௌரி லங்கேஷின் இந்த கொடூரமான கொலையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மதவாதம் மற்றும் இந்துத்துவ அரசியலை விமர்சிப்பதில் அவரது கடுமையான கட்டுரைகள், தைரியமிக்க கருத்துக்கள் மற்றும் வெளிப்படைத்தன்மையின் காரணமாக அவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என நாங்கள் கருதுகிறோம். நாட்டின் சூழ்நிலை எவ்வாறு அபாயகரமாக உள்ளது என்பதை அவரது கொடிய கொலை சுட்டிக்காட்டுகின்றது.

இக் கோரக்கொலை குறித்து மத்திய, மாநில அரசாங்கங்கள் உடனடியாக விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கைது செய்வதுடன் அவர்களுக்குக் கடுமையான தண்டனையும் வழங்க வேண்டுமென நாங்கள் கோருகின்றோம். நல்லெண்ணம் கொண்ட மக்கள் யாவரும் இத்தகைய மதவாத, கொலைபாதக, கொடிய அரசியலுக்கெதிராக நாடு தழுவிய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திட வேண்டுமெனவும் அறைகூவல் விடுக்கிறோம் ■



மதுரையில் நடைபெற்ற கௌரி லங்கேஷின் நினைவேந்தல் நிகழ்ச்சி

# செப்டம்பர் 11: பாரதியாரின் 96வது நினைவுதினம் அனுஷ்டிப்பு

எமது கட்சியின் வெகுஜன அமைப்புக்களான அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO), அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS) ஆகியவற்றின் சார்பாக செப்டம்பர் 11, 2017 அன்று மகாகவி பாரதியாரின் 96வது நினைவுதினத்தை சென்னையிலும் தேனியிலும் அனுஷ்டித்தது.



சென்னையில் நடைபெற்ற பாரதி நினைவுதினக் கூட்டத்தில் தோழர் சாய்குமார் தலைமை உரையாற்றுகிறார்



தேனியில் நடைபெற்ற பாரதி நினைவுதினக் கூட்டத்தில் தோழர் குமாரவேல் உரையாற்றுகிறார்

## மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்

சாஹித் மினார் மைதானம், கொல்கத்தா
17 நவம்பர், 2017, மதியம் 2 மணி

சிறப்புரை : தோழர் பிரவாஸ் கோஷ்
தலைமை : தோழர் மணிக் முகர்ஜி
உரையாற்றுவோர் : தோழர் சத்யவான் (ஹரியாணா)
தோழர் ராதாகிருஷ்ணா (கர்நாடகா)



# பள்ளிக் கல்வியில் புதிய பாடத்திட்டம் வடிவமைக்கும் மண்டல அளவிலான கூட்டம்



மதுரையில் தோழர் வால்டேர், அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் (AIDSO) மாநிலச் செயலாளர் கருத்துக்களை முன்வைக்கிறார்



சென்னையில் தோழர் சுகுபாலா, ஏஐடிஎஸ்ஓ சார்பாக கருத்துக்களை முன்வைக்கிறார்

# சக்திவாய்ந்த மக்கள் இயக்கங்கள்தான் ஆட்சியாளர்களை எல்லை மோதல்களிலிருந்து விலக்கிவைக்கும்

2ம் பக்கத் தொடர்ச்சி

இன்று வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. மலை ராஜ்யமான சிக்கிம் இந்தியாவுடன் இணைக்கப் பட்டுள்ளது. பூடான் கிட்டத்தட்ட இந்தியாவின் பிடியில் உள்ளது, அதன் இறையாண்மை இந்திய அணுகுமுறையால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி அதன் பெரிய அண்ணன் அணுகுமுறையால் சிறிய அண்டை நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போதைய விஷயத்திலும் பூடான் – சீனப் பிரச்சினையில் இந்திய அரசாங்கம், அதிலும் பூடான் கேட்டுக்கொண்டதையும் ஏற்காமல், மூக்கை நுழைத்துள்ளது. இது பெரிய அண்ணன் அணுகுமுறையையே காட்டுகிறது. இப்பிராந்தியத்தின் வல்லரசாக வரவேண்டும், இப்பிராந்தியத்தின் மற்றொரு ஆசிய ஜாம்பவானான சீனாவை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசையில் இந்திய ஆளும் வர்க்கம் இந்த விரிவுவாத பெரிய அண்ணன் அணுகுமுறையைப் பின்பற்றுகிறது, இதற்காக உலகின் மிகப்பெரிய போர்வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியம், அதன் கூட்டாளி இஸ்ரேல், அதேபோல் ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் ராணுவக் கூட்டை ஏற்படுத்துவதற்கும் இவர்கள் தயங்கவில்லை. ஆனால், இந்த விரிவுவாத ராணுவமயமாக்கும் ஆட்சியாளர்கள் அனைவரும் மக்கள் நலன்களைப் பற்றி கவலைப் படுவதே இல்லை, விண்ணை முட்டும் அளவு ராணுவச் செலவினங்களை அதிகரித்து மக்கள் மீது மேலும் சுமைகளை மட்டுமே ஏற்றிவருகின்றனர்.

சீன அரசாங்கத்தைப் பொருத்தமட்டில் அது உண்மையான கம்யூனிச சர்வதேசியத்தைப் பின்பற்றிய நேரத்தில், எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொறுமையான வழியைக் கையாண்டது, மோதலைத் தவிர்ப்பதற்கு பின்வாங்க வேண்டும் என்று முன்மொழிந்தது, இறுதியாக கைப்பற்றிய பகுதிகளையும் திரும்ப ஒப்படைப்பது போன்ற விஷயங்களைப் பின்பற்றியது. மா சே துங் போன்ற மாபெரும் தலைவர் இருக்கும் வரை அது நடந்தது. ஆனால் அங்கே எதிர் புரட்சி நடந்தது முதல், 1978க்குப் பின்னர் அதன் ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களைப் போலவே நடக்கத் தொடங்கினர். இன்றைய சீன அரசாங்கம் சீன முதலாளித்துவவாதிகளை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. உள்நாட்டிலும் அல்லது வெளிநாட்டுத் தொடர்பிலும் எந்தக் கோட்பாடோ அல்லது அறநெறியோ இன்றி நடந்துகொள்கிறது.

மூன்று பத்தாண்டுகள் காலத்திய சோசலிசத்தில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட தொழிற் கட்டமைப்பை பயன்படுத்திக்கொண்டு, அதேபோல் கம்யூனிஸ்ட் கட்சிப் பதாகையை அல்லது மக்கள் விடுதலை ராணுவம் என்ற பெயர்களைப் பயன்படுத்தி தனது சொந்த நாட்டு மக்களையும் உலகையும் ஏமாற்றிக் கொண்டு, இன்றைய முதலாளித்துவ சீனா, இன்றைய அழுகிப்போன முதலாளித்துவத்தின், அதாவது ஏகாதிபத்திய காலகட்டத்தில், எப்போதும் அதிகரித்து வரும் நெருக்கடியைத் தவிர்க்க முடியவில்லை. வெகுசில வலுவான ஏகபோகங்களின் கைகளில் மூலதனமும் அதிகாரமும் குவிந்து கிடக்கிறது, மக்களின் வருவாய் கடுமையாக வீழ்ந்துள்ளது, உள்நாட்டு வெளிநாட்டு ஏகபோகங்களுக்காக விவசாயிகள் ஈவிரக்கமின்றி அவர்களது நிலங்களை விட்டு வெளியேற்றப்படுகின்றனர், இதனால் வேலையின்மை அதிகரிக்கிறது, புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது, கலாச்சாரச் சீரழிவு பெருகிவருகிறது, அதோடு குற்றங்கள்–ஊழல்–அடக்குமுறை கட்டுப்படுத்தமுடியாமல் அதிகரித்துவருகின்றன, எல்லாவற்றிற்கும் மேலாக, ராணுவச் செலவினங்களுக்கும் அதிகாரத்திற்கும் ஏராளமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இவைதான் இன்றைய முதலாளித்துவ சீனாவின் குணாம்சங்களில் சில. இவை எல்லாவற்றோடும் சேர்ந்து ராணுவ பலமும் இன்றைய சீன ஆட்சியாளர்களிடையே பெரிய அண்ணன் மனப்பான்மையை உருவாக்கியுள்ளது. பிற முதலாளித்துவ ஆட்சியாளர்களைப் போலவே, சீனாவின் ஆளும் முதலாளித்துவ வாதிகளும் அதன் அரசாங்க ஆட்சியாளர்களும் பலமான பொருளாதார–ராணுவ வல்லரசாக ஆவதற்காக பலவீனமான அண்டைநாடுகளை அடக்கவும், இந்தியாவைப் போன்ற சக்திவாய்ந்த நாடுகளை எதிர்கொள்ளவும் அடக்கவும் எத்தனிக்கின்றனர். இதை டோக்லாம் சம்பவம் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

### இந்திய–சீன மக்கள் தங்களது முதலாளித்துவ அரசுகளின் கடுமையான நெருக்கடியில் சிக்கியுள்ளனர்

எனவே இந்திய சீன மக்கள் இருவருக்குமே தத்தமது சுரண்டல் முதலாளித்துவ ஆட்சிகளை எதிர்த்து போராடவேண்டிய பிரதான பணி இருக்கிறது. சீனாவைப் போலவே, இந்தியாவிலும் வெகுசில ஏகபோகங்களின் கைகளில் மூலதனமும் அதிகாரமும் குவிந்துள்ளது, பாரபட்சம்–பாகுபாடு–வறுமை–ஏழ்மையால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், தொடர்ந்து அதிகரித்துவரும் வேலையின்மை அதோடு பன்னாட்டு நிறுவனங்களுக்காக விவசாயிகள் தொடர்ந்து அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுதல், வறட்சியிலும் கடனிலும் சிக்கிய விவசாயிகள்–பெட்டிக் கடைக்காரர்கள் தற்கொலைகள் முடிவே இல்லாமல் அதிகரித்து வருகிறது, வேலையின்மையால் விரக்தியடைந்த இளைஞர்கள் கொடிய திட்டமிட்ட குற்றங்களுக்குப் பலியாகின்றனர், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது மனிதாபிமானமற்ற கொடூரமான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இதுபோன்று பல கொடிய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த இதயமற்ற அமைப்புக்கு எதிராக மக்கள் ஒன்றுபட்டு விடக்கூடாது என்பதற்காக மதவாதம்–சாதியவாதம்–பிராந்தியப் பகையுணர்வு போன்ற அனைத்து விதமான பிரிக்கும் நடவடிக்கைகளையும் ஆட்சியாளர்கள் மேற்கொண்டுவருகின்றனர். அதே நேரத்தில், தங்களது திட்டத்திற்கு மக்களைப் பலியாக்க, வல்லரசாக்கவேண்டும் என்ற தங்களது ஆசைக்கு ஏற்றவாறு, தேசிய வெறிவாதத்தையும் தூண்டிவிட்டு வருகின்றனர். இதற்காகத்தான் எல்லைப் பிரச்சினை போன்றவற்றை ஒரு கருவியாக பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இந்திய சீன சாமானிய உழைக்கும் மக்கள் இந்த இரு நாடுகளுமே பொருளாதார–ராணுவ வல்லரசாவதால் தங்களுக்கு, சுரண்டப்படும் மக்களுக்கு நன்மை பயக்காது என்பது புரிந்து கொள்ளவேண்டும். கையளவு ஏகபோகங்களும் அவர்களின் அடிவருடி ஏஜெண்டுகளும் இதில் பயன்பெறுவர். அவர்களது நலனுக்காகத்தான் ஆட்சியாளர்கள் எல்லைப் பிரச்சினைகளை உயிரோட்டமாக வைத்து போர் வெறியைத் தூண்டி தங்கள் ராணுவ தொழிற்சாலைக்கு உத்வேகமூட்டி, தங்களது தரித்திரத்திற்கு முதலாளித்துவம்தான் காரணம் என்று மக்கள் தெரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காக தேசிய வெறிவாதத்தைத் தூண்டி மக்களைத் திசைதிருப்பியும் வருகின்றனர். சோசலிச சீனாவில் இருந்த அணுகுமுறை ஆறு முதலாளித் துவத்தைப் பின்பற்றத்தொடங்கியதும் காணாமல் போய்விட்டது. தற்போது கர்வத்தோடு, கையை முறுக்கும், வல்லாதிக்க மனப்பான்மையோடும், ஏகாதிபத்திய வல்லரசைப்போலவே நடந்துகொள் கிறது. இந்திய பூர்ஷ்வா ஆட்சியாளர்களும் இதே பாதையில் நீண்ட நாட்களாகப் பயணித்து வருகின்றனர் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

### இந்தியா மற்றும் சீனாவின் விழிப்புணர்வுள்ள மக்கள் மட்டுமே இந்தப் பின்னடைவிலிருந்து தங்கள் நாட்டைப் பாதுகாக்க முடியும்

எனவே இரு நாட்டு மக்களும் தத்தம் நாட்டு ஆளும் வர்க்கத்தின் விளையாட்டைப் புரிந்து கொள்ளவேண்டும். டோக்லாம் பிரச்சினை போன்ற சம்பவங்களை காரண காரியத்துடன் அவர்கள் பார்க்க வேண்டும். இந்த இரண்டு முதலாளித்துவ–ஏகாதிபத்திய சக்திகளும் தங்கள் ஏகாதிபத்திய விரிவுவாத நடவடிக்கைகளை மேலும் தொடராதவாறு அல்லது மோசமான ராணுவ மோதலில் ஈடுபடாதவாறு இரு நாட்டு விழிப்புணர்வுமிக்க மக்களும் அவரவர் நாட்டு பூர்ஷ்வா அரசாங்கங்கள் மீது அழுத்தம் தரும் வகையில் உறுதியாக நின்று வலுவான கருத்துக் களையும் போராட்டத்தையும் நடத்த வேண்டும். ராணுவம் தீர்வைத் தராது, எனவே அவற்றை உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும். எல்லைப் பிரச்சினைகளை விவாதங்கள் பேரங்கள் பேச்சுவார்த்தைகள் மூலமாக அமைதியான பொறுமையான சூழலில் தீர்க்க முடியும் என்பதை இருநாட்டு மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு சிறிது காலமானாலும் கூட இதைத் தவிர வேறு வழியில்லை. எல்லைப் பிரச்சினைகளுக்கு, அது இந்தியா–சீனா இடையேயான அல்லது பூடான்–சீனா இடையேயான அல்லது வேறு எந்த நாடுகளுடனான எல்லைப் பிரச்சினைகளாக இருந்தாலும் அவற்றிற்கு நியாயமான நீண்டகாலத் தீர்வு காண்பதற்காக வரலாறு மற்றும் பூகோள அடிப்படையிலும், நிர்வாகம், பொருளாதாரம், வியாபாரம், வர்த்தகம் இன்னும் இதுபோன்ற இப்பிராந்தியத்தின் இதர நடவடிக்கைகளின் யதார்த்தமான தேவைகள் தொடர்பானவை களையும் கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தை களை நிச்சயம் நடத்தவேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகளின் எல்லையை ஒட்டியுள்ள மக்களின், பரஸ்பர உறவுகளையும், மதம், சம்பிரதாயங்கள், மொழிகள் இன்னும் இதுபோன்ற கலாச்சார, பழக்கவழக்கங்கள் போன்றவை யெல்லாம் ஆழமான உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் உருவாக்கியிருப்பதால் அவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். இன்றைய காலகட்டத்தில் எந்த ஒரு நாடும் தனது முடிவை மற்ற நாட்டின் மீது திணிக்க முடியாது. பகுத்தறிவான, பொறுமையான ஏற்கத்தக்க விவாதங்களும் பேரங்களும் மட்டுமே தீர்வைத் தரும். இதற்கு இருநாடுகளிலுமுள்ள விழிப்புணர்வு மிக்க செயலூக்கமுள்ள மக்கள்தான் இந்த வழியில் தீர்வு காண அவரவர் நாட்டு அரசாங்கங்களை நிர்ப்பந்திக்க வேண்டும். டோக்லாம் பிரச்சினையில் உடனடியாக இரு நாடுகளும் தங்களது ராணுவத்தை திரும்பப்பெற வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தை கூறி பூடானின் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கீழ் இந்தியா தலையிடுவதை உடனடியாகத் தடுக்கவேண்டியதும் முக்கியமாகும் ■

## புதுச்சேரி யூனியன் பிரதேசம்

### பாரதியார் பாட்டு எழுதிய குயில்தோப்பில் பாரதிக்கு சிலையும் மணிமண்டபமும் அமைக்கக் கோரி ஏ ஐ டி ஓய் ஓ ஆர்ப்பாட்டம்




புதுச்சேரியில் செப்டம்பர் 11, 2017 அன்று நடைபெற்ற அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்க ஆர்ப்பாட்டத்தில் தோழர் முத்து உரையாற்றுகிறார்

புதுச்சேரியில் பாரதியார் பாட்டு எழுதிய குயில்தோப்பை அரசு கையகப்படுத்தி பாரதியாருக்கு சிலையும் மணிமண்டபமும் அமைக்கவேண்டுமென்று அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO) செப்டம்பர் 11, 2017 அன்று இசிஆர் சிவாஜி சிலை அருகே நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# காஷ்மீர் பள்ளத்தாக்கில் குடிமக்கள் கோழைத்தனமாகக் கொல்லப்படுவதையும் ஆர்ட்டிக்கிள் 35 ஏ –ஐ ரத்து செய்யும் இறுமாப்பான நடவடிக்கையில் உள்ள அரசாங்கத்தின் தொடர்பையும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஆகஸ்ட் 26, 2017 அன்று விடுத்துள்ள அறிக்கை:*

காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் ஆகஸ்ட் 2017, 21ஆம் தேதியன்று போலி என்கவுண்டர் எனக் கூறப்படும் சம்பவத்தில் இந்திய ராணுவத்தால் ஒரு குடிமகன் மிகவும் கோழைத்தனமான முறையில் கொல்லப்பட்டதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். காஷ்மீரின் ஹண்ட்வரா பகுதியின் ஹவ்புருவா வன எல்லையில் குண்டு பாய்ந்த உடல் போலீசால் கண்டுபிடிக்கப்பட்டது. இது போன்ற கோரக் கொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மத்திய, மாநில அரசாங்கங்கள் இத்தகைய சம்பங்கள் மீது விசாரணை நடத்தி இதுபோன்று கொல்லப்படும் நடவடிக்கைகளில் முக்கியக் குற்றவாளிகளாயிருக்கும் ராணுவ / போலீஸ் அதிகாரிகளைக் கைது செய்வதுடன் அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்தில் எப்போது வேண்டுமானாலும் பற்றியெரியக்கூடிய சூழ்நிலையைத் தணித்திட உடனடியாகத் தேவையான அரசியல் முன்முயற்சியை மேற்கொள்ள வேண்டியதும் மனக்குறையிலிருக்கும் கிளர்ந்தெழுந்துகொண்டிருக்கும் காஷ்மீர் மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற்றிடுவது மத்திய அரசாங்கத்தின் கட்டாயப் பங்காகும். ஏனெனில், சுதந்திரமடைந்த பின்பு இந்தியாவுடன் இணைக்கப்பட்டபோது வழங்கப்பட்ட சிறப்பு உரிமைகளும் உத்தரவாதங்களும் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றன. மாறாக அரசாங்கமானது, மாநிலத்தில் “நிரந்தரமாக வசிப்பவர்கள்” என ஜம்மு காஷ்மீரின் சட்டசபை வரையறை செய்யும் வகையிலும் அத்தகைய நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு சிறப்பு உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கிட வேண்டுமென்று அரசியலைப்புச் சட்டப் பிரிவு 35ஏ வை ரத்து செய்ய வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு பொதுநல வழக்கிற்கு சாதகமாகச் செயல்பட்டு பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிக்கொண்டு வருகிறது. தவறுதலாக வழிநடத்தப்பட்ட சிலரின் இத்தகைய நடவடிக்கை ஆளும் கட்சியின் மறைமுக ஆதரவைப் பெற்றிருப்பது பிரிவினைவாத மத அடிப்படைவாதிகளுக்குச் சாதகமான ஒரு தெளிவான காரணத்தை வழங்கியிருப்பதால் அவர்கள் உண்மையான காரணங்களுக்காக இந்திய அரசாங்கத்திற்கு எதிராக அதிகரித்துவரும் காஷ்மீர் மக்களின் அதிருப்தி மற்றும் மனக்கொதிப்பைப் பயன்படுத்திக்கொண்டு, இந்திய எதிர்ப்பு மனோபாவத்தைத் தூண்டிவிட்டுக்கொண்டு, தூண்டிவிடும் கோஷங்களுடன் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் பொதுநல வழக்கு விசாரணை நாளன்று மாநிலம் முழுவதும் பந்த் நடத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அவர்களைத் தவறாக வழிநடத்த முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். இது நிச்சயம் நிலைமையை மேலும் மோசமாக்குவதுடன் அதிக அளவிலான வன்முறை, உயிர்கள் மற்றும் சொத்துக்கள் இழப்பு ஏற்படுவதற்கும் மேலும் முக்கியமாக இந்தியாவிலிருந்து காஷ்மீர் மக்கள் அந்நியப்படுவதற்கும் காரணமாகிவிடும்.

எனவே, அரசாங்கமானது பிரிவு 35 ஏவை ரத்து செய்யும் நடவடிக்கையிலிருந்து அதுவே விலகி நிற்கவேண்டும் என்றும், காஷ்மீர் மக்களை மேலும் விரோதிகளாக்கும் தேவையற்ற பதற்றமேற்படுத்தும் நடவடிக்கையைத் தவிர்த்திட வேண்டுமென்றும், கருப்புச் சட்டமான AFSPA வை ரத்து செய்திட வேண்டுமென்றும், மேலும் கால தாமதமின்றி பள்ளத்தாக்கில் அமைதியையும் சகஜ நிலைமையையும் கொண்டுவர காஷ்மீர் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்திடும் வகையில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் நாங்கள் கோருகின்றோம்.

இது போன்று குடிமக்கள் கோரமாக கொல்லப்படுவதையும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஏற்கனவே இருக்கின்ற எப்போதும் வெடித்தெழக்கூடிய நிலைமையை மேலும் மோசமாக்கிடத் தூண்டிவிடப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்திட சரியாகச் சிந்திக்கக்கூடிய, ஜனநாயக எண்ணம் கொண்ட மனசாட்சிகொண்ட மக்களை நாங்கள் அறைகூவி அழைப்பதுடன் இத்தகைய வேண்டுமென்றே செய்யப்படும் கொலைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்திடவும், அரசியலைப்புச் சட்டப் பிரிவு 35 ஏவை ரத்து செய்திட மேற்கொள்ளப்படும் அடாவடித்தனமான நடவடிக்கை உடனடியாக கைவிடப்படுவதை உத்திரவாதப்படுத்திடவும் அவர்கள் ஒன்றிணைந்து பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்திட வேண்டுமெனவும் அறைகூவி அழைக்கின்றோம் ■

# மியான்மாரில் ரோஹிங்கியா மக்கள் மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்படுவதை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக அது தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்றும் அண்டை நாடுகளில் அடைக்கலம் தரப்படாமல் அவர்கள் அகதிகளாக விரட்டியடிக்கப்படும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை தடுத்திட வேண்டுமென்றும் அறைகூவல் விடுக்கின்றது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் செப்டம்பர் 11, 2017 அன்று விடுத்துள்ள அறிக்கை:*

மியான்மார் அரசாங்கம் ராணுவத்தின் உதவியுடன் அந்நாட்டின் ரகினே என்ற மலை மாநிலத்தைச் சார்ந்த ரோஹிங்கியா இனத்தவர் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைத் தொடர்ந்துகொண்டிருப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ‘மனித இனத்திற்கெதிரான குற்றங்கள்’ என குறிப்பிடக்கூடிய மியான்மார் அரசாங்கத்தின் இத்தகைய கொடுமையும் காட்டுமிராண்டித்தனமும் இந்த சிறுபான்மையின மக்களுக்கு எதிரான அதன் இன வெறுப்பினால் நடத்தப்பட்டதாகும். தங்களின் உயிரைப் பாதுகாத்திட துன்புறுத்தல் மற்றும் சித்திரவதைக்கு ஆளான ரோஹிங்கிய மக்கள் அவர்களின் வீடுகளையும் குடும்பங்களையும் விட்டு வெளியேறிடக் கட்டாயப் படுத்தப்பட்டு அண்டை நாடுகளான வங்கதேசம், இந்தியா மற்றும் பிற நாடுகளில் அடைக்கலம் வேண்டி நிற்கின்றனர்.

இத்தகைய காட்டுமிராண்டித்தனம் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும், வெளியேற்றப் பட்ட ரோஹிங்கிய மக்கள் பாதுபாப்பாக அவர்களின் தாய் நாட்டிற்குத் திரும்புவதை உத்திரவாதப்படுத்திட முனைப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அவர்களின் ஆபத்தின்மையும் பாதுகாப்பும் உத்திரவாதப் படுத்தப்பட வேண்டும் என நாங்கள் கோருகின்றோம்.

பரிதாபகரமான நிலையில் துன்பத்திலிருக்கும் இத்தகைய மக்களை இந்தியாவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் விரட்டியடிக்க நினைக்கும் எண்ணம் என்பதே ஓர் நாகரிகமற்ற மற்றும் மனிதாபிமானமற்ற செயல் என நாங்கள் உறுதியாகக் கூறிட விரும்புகின்றோம். அத்தகைய சிந்தனைகள் கைவிடப்பட்டாக வேண்டும் மற்றும் அவர்களை வெளியேற்றிட மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உடனடியாக நிறுத்தப்பட்டாக வேண்டும் ■

# நீட் தேர்வை ரத்துசெய்யக் கோரியும் மாணவி அனிதா தற்கொலைக்குக் காரணமான அரசாங்கங்களைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டங்கள்



மதுரையில் செப்டம்பர் 04, 2017 அன்று ஏ ஐ டி எஸ் ஓ, ஏ ஐ எஸ் எப், எஸ் எப் ஐ ஆகிய மாணவர் சங்கங்கள் நடத்திய கூட்டு ஆர்ப்பாட்டம்




தேனியில் செப்டம்பர் 05, 2017 அன்று அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) நடத்திய ஆர்ப்பாட்டத்தில் தோழர் வால்டேர், ஏ ஐ டி எஸ் ஓ வின் மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**